Registered as a news paper.
பொதுசன நூலகம்
பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

- 4 MAR 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

TOSHIBA

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்.நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திக ளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்

IIS Office Automation
No. 360/3, Main Street, Jaffna. T.P No: 222 7676 / 4 590 190

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 12 (04.03.2004) வியாழக்கிழமை இதழ்:155

## முஸ்லிம் காங்கிரஸுக்கு ஆதரவு தெரிவித்து தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து அம்பாறை சுயேட்சைக்குழு விலகியது

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிட வேட்புமனுத் தாக்கல் செய்த சுயேட்சை இல.15 இன் முதன்மை வேட்பாளர் தமது குழு போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இந்த சுயேட்சைக் குழுவின் முதன்மை வேட்பாளர் கலீல், இது குறித்துத் தெரிவிக்கையில்,

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கு ஆதரவளிக்கும் வகையிலேயே தாம் போட்டியிலிருந்து விலகுவதாகக் குறிப்பிட்டார். மேலும் எதிர்கால சவால்களை முகங்கொடுக்கும் வகையில் முஸ்லிம்களின் பலத்தை அதிகரிக்க முடிவுசெய்துள்ளோம்.

கடந்த தேர்தலில் முஸ்லிம் சமூகத்தின் சார்பில் மூன்று பேர் தெரிவாகினர். அதே போன்று இந்த முறையும் முஸ்லிம்கள் வெற்றி பெறவேண்டும் என்பதில் அக்கறையுடன் இருக்கிறோம் என்றும் கலீல் குறிப்பிட்டார்.

## இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண கூட்டமைப்பு உழைக்க வேண்டும்!

### நல்லை ஆதீன முதல்வர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாட்டில் நீண்டகாலமாக ஏற்பட்டுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு முன்னின்று உழைக்க வேண்டுமென நல்லை ஆதின குரு முதல்வர் கூட்டமைப்பு வேட்பாளர்களிடம் வலியுறுத்தினார்.

கூட்டமைப்பு வேட்பாளர்கள் நேற்று யாழ். மாவட்ட மதத் தலைவர்களைச் சந்தித்து அவர்களின் ஆசீர்வாதத்தினைப் பெற்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்களான மாவை சேனாதிராஜா, என்.ஸ்ரீகாந்தா, கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.ரவிராஜ், எஸ்.சிவமகாராசா, சுரேஸ் பிரேமச்சந்திரன், கே.சிவஞானம், எஸ்.கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன், எஸ்.சிவநேசன், சொ.சூ.சிறில், யாழ். தேசியப் பட்டியல் வேட்பாளர் விந்தன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்காக

# தேர்தல் தினத்தன்று தமது நிலைகளை பின் நகர்த்துவதற்கு புலிகள் இணக்கம்!

## புதிய யோசனை முன்வைப்பு

(யாழ்ப்பாணம்)

**எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வசிக்கும் வாக்காளர்களுக்கான கொத்தணி வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு ஏதுவாக விடுதலைப் புலிகள் தமது முன்னரங்க நிலைகளைப் தற்காலிகமாக பின்னநகர்த்துவதற்குத் தயாராகவிருப்பதாகவும், இது தொடர்பான திட்டமொன்று முன்வைக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் இரண்டரை லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் வாக்களிக்கும் வகையிலேயே இந்தத் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு தேர்தல் திணைக்களம் மறுத்துள்ள நிலையிலேயே - வாக்காளர்களின் நன்மைகருதி கொத்தணி வாக்குச்சாவடிகளை அமைப்பதற்கு புதிய திட்டம் முன்வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தல் தினத்தன்று தமது முன்னரங்க நிலைகளை சுமார் 500 மீற்றர் தூரத்திற்குப் பின்னகர்த்துவதற்கும், தற்போதைய முன்னரங்க நிலைப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் கொட்டகைகளை வாக்குச்சாவடிகளாகப் பயன்படுத்துவதற்கும் புலிகள் இணக்கம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

மேலும் இந்த வாக்களிப்பு நிலையங்களில் பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவதற்கும் சர்வதேச கண்காணிப்புக்குழு மற்றும் தேர்தல் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் இதனை மேற்பார்வை செய்யவும் புலிகள் அனுமதிக்கலாம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை - தமது முன்னரங்க நிலைகளைப் பின்னகர்த்த இணக்கம் தெரிவித்துள்ள புலிகள் - தமது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து செல்லும் மக்கள் சுதந்திரமாகவும், சோதனைக் கெடுபிடிகள் இன்றியும் வாக்களிக்க அனுமதிக்கப்படவேண்டும் என நிபந்தனை விதித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நெருப்புக் காய்ச்சல் அபாயம் யாழ். குடாநாட்டில் அதிகரிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நெருப்புக் காய்ச்சல் தீவிரமாகப் பரவும் வாய்ப்பிருப்பதால், அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளில் மக்கள் ஈடுபடுதல் அவசியம் என யாழ். மாவட்ட சுகாதாரசேவை திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ. மாவட்டத்தில் வரட்சி நிலை தோன்றியிருப்பதால், சகல கிணறுகளுக்கும் குளோரின் பாவித்தல் வேண்டுமெனவும், குடிநீரை சுடவைத்து அருந்துதல் மிகவும் நன்மையளிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரியாலை பகுதியில் எலும்புக்கூடு கண்டுபிடிப்பு!

(யாழ்ப்பாணம்)

அரியாலை பகுதியில் நேற்று கண்ணிவெடி அகற்றும் பணியில் ஈடுபட்டிருந்த 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனத்தைச் சேர்ந்தவர்களால் விடுதலைப் புலிகளது இராணுவச் சீருடையுடன் கூடிய எலும்புக்கூடொன்று மீட்கப்பட்டுள்ளதாக படைத்தரப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக படைத்தரப்பு மேலும் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வேட்பாளர் கொலை; ஜப்பான் கண்டனம்!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருந்த ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டதை ஜப்பான் அரசு கண்டிப்பதுடன், இதனை மிகவும் ஆழமாகவும் நோக்குகின்றது.

இவ்வாறு இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அசியோ அடா தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் இரு வேட்பாளர்கள் மட்டக்களப்பில் விலகினர்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை வேட்பாளர் உட்பட இருவர் நேற்று முன்தினம் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்துள்ளனர்.

தலைமை வேட்பாளர் ஈ.பி.பெர்ணாண்டோ மற்றும் ஐக்கிய தேசியக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் எ.மனோகரன் ஆகியோரே தாம் சொந்தப்பிரச்சினை கார

(12 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ். மாவட்டத்தில்

## தபால் மூலம் வாக்களிக்க 4,482 பேர் விண்ணப்பம்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பிப்பதற்கு - கடந்த மாதம் 17 ஆம் திகதி 5 விண்ணப்பங்களும், 19 ஆம் திகதி 29 விண்ணப்பங்களும், 20 ஆம் திகதி 222 விண்ணப்பங்களும், 21ஆம் திகதி 282 விண்ணப்பங்களும், 22 ஆம் திகதி 232 விண்ணப்பங்களும் 24 ஆம் திகதி 274 விண்ணப்பங்களும் 25 ஆம் திகதி 233 விண்ணப்பங்ளும், 26 ஆம் திகதி 155 விண்ணப்பங்களும், 27 ஆம் திகதி 243 விண்ணப்பங்களும், 28 ஆம் திகதி 242 விண்ணப்பங்களும், 29 ஆம் திகதி 14 விண்ணப்பங்களும் இம்மாதம் முதலாம் திகதி 1160 விண்ணப்பங்களும் தேர்தல் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வாக்களர் அட்டைகள் தேர்தல் திணைக்கள ஆணையாளர் ஊடாக 15 ஆம் திகதி அஞ்சல் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கபபட்டு உடன் விநியோகிக்கப்படவுள்ளது.

21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

### உள்ளூராட்சி தேர்தலை

## நடத்தமுடியாத பகுதிகளில் பொதுத்தேர்தல் சாத்தியமா?

### ஜே.வி.பிக்கு சந்தேகமாம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடத்தமுடியாத பகுதிகளில் பொதுத் தேர்தலை நடாத்துமாறு விடுதலைப் புலிகளும், ஏனைய அமைப்புக்களும் விடுத்த அறிக்கை சந்தேகத்துக்குரியதாக இருப்பதாக ஜே.வி.பி கூறியுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருககு ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா அனுப்பியுள்ள கடிதத்தில் -

வடக்கு - கிழக்கில் நடத்தப்படவேண்டிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
ail 8-jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# பட்டதாரி பயிலுநர்களுக்கான வினைதிறன்காண் தடைப்பரீட்சை

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல மாவட்ட மற்றும் பிரதேச காரியாலயங்களில் நியமிக்கப்பட்டுள்ள சகல பட்டதாரி பயிலுனர்களுக்குமான முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை எதிர் வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளதென, வடக்கு - கிழக்கு பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பொ. பாலசிங்கம் தெரிவித்தார்.

அரச முன்னுரிமை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பிரதேசசபைகள், பிரதேச செயலங்கங்கள் மற்றும் அரசாங்க பாடசாலைகள என்பனவற்றில் புதிதாக பதவிகள் உருவாக்கப்பட்டு பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

அரச முன்னுரிமை நடவடிக்கைகளுக்காக ஆட்சேர்க்கப்பட்டு வேறு பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்களுக்கான வினைத் திறமைகாண் தடைப்பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் காலக்கிரமத்தில் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண சேவையின் கீழ் இவ்வாறான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கான மேற்படி பரீட்சை இதுவரை நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து சமயவிவகார அலுவல்கள் அமைச்சின் யாழ். மாவட்ட பிராந்திய அலுவலகம் நீர்வேலி ஸ்ரீ கணேசா அறநெறிப் பாடசாலை ஆதரவுடன் நடாத்தும் 68 ஆவது ஆனமீக நிகழ்சிச்தொடர் நிகழ்வு நாளை பிற்பகல் 5 மணிக்கு நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறும்.

# மன்னார் பாடசாலை குண்டு வெடித்து சேதம்

(மன்னார்)

மன்னார் - பள்ளிமுனையில் அமைந்துள்ள சென்லூசியா மகா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக்கட்டடம் இனந்தெரியாத நபர்கள் வைத்த குண்டினால் ஒரு பகுதி இடிந்து வீழ்ந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மூன்று மணியளவில் நடைபெற்றது. ஆண்டு மூன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் பயன்படுத்தும் கட்டடத் தொகுதியே இனந்தெரியாததோரின் தாக்குதலுக்கு இலக்கானது.

நேற்று முன்தினம் பிற்பகல் 2.45 மணியுடன் பாடசாலையை விட்டு மாணவர்கள் அனைவரும சென்றதனால் தெய்வாதீனமாக எவருக்கும் காயமேற்படவில்லை. (201)

# இல்ல மெய்வன்மைப் போட்டி

(உடுவில்)

உடுவில் தமிழ்கலவன் பாடசாலை இல்லமெய்வல்லுநர் போட்டி இன்று பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.லோகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

உடுவில் கோட்டக்கல்வி பணிப்பாளர் செ.குபேரநாதன் பிரதம விருந்தினராகவும், கோட்டைக்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திருச்சி நவரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (101)

## 13 வருடங்களின் பின்

# இயக்கச்சிப் பொதுச் சந்தை விரைவில் திறக்கப்படும்

(வடமராட்சி)

இயக்கச்சிப் பொதுச் சந்தை கடந்த 13 ஆண்டுகளின் பின்னர் விரைவில் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது கொட்டகை அமைத்து புனரமைப்பு வேலைகள் நடைபெற்றுக்கொண்டு இருப்பதாகவும், வேலைகள் முடிந்த பினனர் திறக்க பச்சிலைப்பள்ளி பிரதேச சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை காலமும் பொதுச் சந்தை இல்லாத முள்ளிப்பற்று பிரதேச மக்கள் இந்த பொதுச் சந்தையினால் பெரிதும் நன்மையடைவார்களென பச்சிலைப்பள்ளி பிரதேசசபை செய லாளர் தெரிவித்தார். (17)

# அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின்

## பெண்கள் அபிவிருத்தித் திட்டப்பிரிவு

20 கிராம மாதர் சங்கங்கள், மாதர் குழுக்களுடன் இணைந்து நடத்துகின்ற

# சர்வதேச மகளிர் தினம் - 2004



"பெண்களின் உரிமைகளை மீட்டெடுப்போம்"

- ஆய்வுரைகள்
- நாடக அரங்கு
- கவியரங்கு
- கருத்துப் பரிமாற்றங்கள்
- ஆக்கபூர்வமான முன்மொழிவுகள்.

காலம் - 08.03.2004

இடம் - நாவலர் மண்டபம்,
நாவலர் வீதி,
நல்லூர்.

*பெண்கள் தங்கள் பலத்தில் தங்கி வாழவேண்டும் என்று தூய மனதோடு விரும்புகின்றவர்களை இந்த நிகழ்வில் பங்கு கொள்ள அழைக்கின்றோம்.*

**எங்கள் பலத்தில் தங்கி நிற்போம் நாங்கள்**

பெண்கள் அபிவிருத்திப் பிரிவு TRRO
106, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(சி-2289)


**A/L - O/L ENGLISH**

ஆசிரியர் திரு.S.மாதவன்

வியாழன் / ஞாயிறு: 4.30 - O/L, 5.30 - A/L

கற்சுமி கல்வி நிறுவனம்

பிரத்தியேக வகுப்புகள் சேவை
166, நாவலர் வீதி - யாழ்.

(655)

திறைஞ்சனைல் சங்கானை

இன்று முதல் விஜய், சூர்யா, தேவயாணி- நடித்த

ப்ரண்ட்ஸ்

காட்சி நேரம் : 11.00, 2.45, 6.00.(பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

**BLOOD SPORT - 2**

(சி-2262)

**ராஜா** யாழ்ப்பாணம்.



தனுஷ், அபர்ணா, கருணாஸ் நடித்த

புதுக்கோட்டையிலிருந்து சரவணின்

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

8 ஆம் திகதி முதல் கோவில்

(சி-2263)

**யசோ இறபர் ஸ்டாம்**

75/=

பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)


# அறிவித்தல்

## பாராளுமன்றப் பொதுத்தேர்தல்-2004

## தேர்தல் மாவட்ட இல.10 - யாழ்ப்பாணம்

சகல சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்களுக்கும்

தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது 2004.02.23 ம் திகதிய கடிதத்திற்கு மேலதிகமாக, தேர்தல் கடமைக்காக சொந்த/இரவல்/வாடகை வாகனங்களைப் பயன்படுத்துவது பற்றிய விபரம் கீழ்வருமாறு

1. வாகனங்கள் நல்ல நிலையில் இருக்கவேண்டும்.
2. இரவல்/வாடகை வாகனங்களாயின் அவை இம்மாவட்டத்தில் உள்ளவையாக இருக்கவேண்டும்.
3. வாகனத்திற்கு பூரண காப்புறுதி இருக்கவேண்டும். இல்லாதவிடத்து இரு வாரத்திற்கென குழப்பம், கலவரங்கள் என்பவற்றுக்கு ஏற்ற காப்புறுதி பெறவேண்டும்.
4. வாகனத்திற்கான கொடுப்பனவு : (1 கி.மீ இற்கான கொடுப்பனவு)

| வாகனம் | பெற்றோல் | டீசல் |
| --- | --- | --- |
| 4 முதல் 7 வரையான ஆசன வசதி | 19.00 | 16.00 |
| 8 முதல் 14 வரையான ஆசன வசதி | 24.00 | 20.00 |

மற்றும் வாகனம் தரித்துநிற்கும் காலத்திற்கும் கீழ்வருமாறு கொடுப்பனவு வழங்கப்படும்.

★ 8 ஆசனத்திற்கு குறைவான வாகனம் - மணித்தியாலத்திற்கு ரூ. 7.50
★ 8 ஆசனத்திற்கு கூடிய வாகனம் - மணித்தியாலத்திற்கு ரூ. 15.00

5. இத்துடன் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படும் காலப்பகுதியுள் 50 கி.மீற்கு அதிகமாக செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் 50 கி.மீற்கான ஆக்குறைந்த கொடுப்பனவு வழங்கப்படும்.
6. வாடகைக்கு அமர்த்தியபின் இயந்திரக்கோளாறு ஏற்பட்டால் எவ்வித கொடுப்பனவும் வழங்கப்படமாட்டாது.
7. தங்களுக்கு ஏற்கனவே அனுப்பிய விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த வாகன வரி அனுமதிப்பத்திரம், காப்புறுதி சான்றிதழின் புகைப்பட பிரதிகளை இணைத்து அனுப்பவும்.
8. வாகனங்கள் தேர்தல் நடைபெறும் திகதியிலிருந்து இருநாட்களுக்கு முன் பொறுப்பேற்கப்படுவதுடன் தேர்தல் முடிவடையும் திகதிக்கு அடுத்த நாள் விடுவிக்கப்படும்.

தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம்
இல.10 - யாழ்ப்பாணம்.

(சி-2288)

# கந்தபுராணம் - யுத்த காண்டம்

## உரைநூல் வெளியீடு

2004.02.04 இல் நடைபெறவிருந்த மேற்படி வெளியீடு 2004.03.06 சனிக்கிழமை பி.ப.2.00 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறும். சைவப் பற்றாளர்களின் வருகையைப் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

மேற்படி உரைநூலை நல்லை ஆதீனத்திலும், கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கத்திலும் 2004.03.06 ஆம் திகதிக்குப் பின்னரும் பிரதி ஒன்று ரூபா 650/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

சைவத்தமிழ் நூல்
வெளியீட்டுக் கழகம்.

(சி-2287)

## கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

# கிராமிய வங்கி சேமிப்பு மீதிகளையும் மற்றும் செல்மதி வருமதி மீதிகளையும் உறுதிப்படுத்தல்

மேற்படி சங்கத்தின் 2002 - 2003 நிதியாண்டுக் காலத்திற்கான கணக்காய்வு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் சங்கத்திலும், கிராமிய வங்கியிலும் வைப்புக்களையும், கணக்குகளையும் வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் 10.03.2004 ஆந் திகதி புதன்கிழமை தொடக்கம் 12.03.2004 ஆம் திகதி வெள்ளி வரையான காலப்பகுதியில் உங்கள் சேமிப்புப் புத்தகங்களிலும் சங்கக் கணக்குப் புத்தகங்களிலும் 31.05.2003 இல் உள்ளவாறான மீதிகளைச் சங்கத்திலும் சங்கக் கிராமிய வங்கியிலும் கடமை நேரத்தில் சரிபார்த்து உறுதிப்படுத்தி கணக்காய்விற்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி.

கணக்காய்வாளர்,
கட்டைவேலி - நெல்லியடி.
ப.நோ.கூ.சங்கம்.

(சி/2286)

# அரசியலமைப்பை திருத்தாவிடின் தமிழருக்கு உரிமை கிடைக்காது

## கேணல் கருணா அம்மான் தெரிவிப்பு

இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பைத் திருத்தியமைக்காதவரை தமிழர்களுக்கு ஒருபோதும் உரிமை கிடைக்காது எனத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் கருணா அம்மான் தெரிவித்தார்.

கல்குடா பகுதியில் கடந்த வருடம் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்குத் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்விலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

தமிழ்மக்களின் உரிமையைச் சமாதான வழிமுறை மூலம் வெல்வதற்கு யாப்பில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும். வரப்போகும் தேர்தலில் தமிழர் கூட்டமைப்புக்கு ஆதரவை வழங்குவதன்மூலம், ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழர் தரப்பு மாறவேண்டும். இதன்மூலமே நாம் யாப்பைத் திருத்துவதற்கான அழுத்தங்களைக் கொடுக்கமுடியும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பின்னர் உலக நாடுகள் பலவற்றுக்குச் செல்லும் வாய்ப்பு எமக்குக் கிடைத்தது. உலகின் முக்கிய தலைவர்களுக்குத் தமிழ்மக்களின் உண்மைநிலை தொடர்பாகவும் உணர்த்தியுள்ளோம்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நாடாளுமன்றத்தைக் கலைத்து, அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாலேயே சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்பட்டன.



சர்வதேச சமூகம் - சிங்கள இனத்தின் கொடிய முகத்தைப் பார்க்கக்கூடிய வகையில், இன்று சிங்கள தேசம் உள்ளது. இந்த வரைபின்மூலம் எமது பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு இன்று சர்வதேச அங்கீகாரம சிறந்த முறையில் உள்ளது.

உலகநாடுகள் இன்று எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மைத்தன்மையை உணர்ந்துள்ளன.

எனவே, தமிழ் மக்கள் சகல வேறுபாடுகளையும் களைந்து, ஆட்சியைத் தீர்மானிக்கும் வெற்றி சக்தியாக தமிழர் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்த வேண்டும். இதன் மூலம் அரசியல்ரீதியிலான அழுத்தங்களைக் கொடுக்கமுடியும் எனத் தெரிவித்தார்.

# தொழில்நுட்ப அலுவலர் உள்ளக இடமாற்றம்

## மாகாண கல்வி அமைச்சு முடிவு!

வடக்கு -கிழக்கு மாகாண கல்வியமைச்சின் கீழ்வரும் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு உளளக இடமாற்றம் ஒன்றினை மேற்கொள்வதற்கு, மாகாண கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சின் உதவிச் செயலாளர் ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

இந்த உத்தியோகத்தர்களின் தொடர்ச்சியான வேண்டுகோளுக்கிணங்க - வலயக்கல்வி அலுவலகங்களுக்கிடையில் உள்ளக இடமாற்றங்களை மேற்கொள்ளப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் வலயக் கல்வி அலுவலகங்களுக்கிடையில் இடமாற்றம்பெற விரும்பும் உத்தியோகத்தர்கள் - விண்ணப்படிவங்களை வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன், மாகாண கல்வியமைச்சுக்கு அனுப்பு வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

# யு.எஸ்.எயிட் பணிப்பாளர் இந்தவாரம் வருகிறார்

(கொழும்பு)

அமெரிக்காவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச அபிவிருத்தி முகவர் நிலையத்தின் (யு.எஸ்.எயிட்) பணிப்பாளர் டேவிட் ரெய்லர் - இந்தவாரம் இலங்கைக்கு வரவுள்ளதாக கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கத் தூதரகம் தெரிவித்ததாவது -

இலங்கை வரும் ரெய்லர் இங்கு பல்வேறு தரப்பினரையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். இவற்றில் அரசாங்க அதிகாரிகள், அரசியற் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகளும் அடங்குவர். இவர்களைச் சந்தித்தபின் குறுகிய காலப் பயணமாக திருகோணமலைக்கும செல்லவுள்ளார்.

நீண்டகாலமாக இலங்கையில் இடம்பெற்றுவரும் முரண்பாடுகளை நீக்கி, சமாதானத்தை ஏற்படுத்தவும், தகவல் தொடர்புகளை அதிகரிக்கவும், சமாதான முயற்சிகள் சகல சமூகத்தவரை சென்றடையும் வகையில் செயற்படவும், வன்செயல்களைத் தடுக்கவும் யு.எஸ்.எயிட் தனது ஆதரவை வழங்குமென அமெரிக்கத் தூதரகம் தெரிவித்துள்ளது.

### புலிகளின் கட்டுப்பாட்டு பகுதியில்

# வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படக் கூடாது!

## ஹெல உறுமய கூறுகிறது

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படுவதனை தமது கட்சி கடுமையாக எதிர்ப்பதாகவும், இவ்வாறு அமைக்கப்படுவதால் வாககாளர்களதும், வேட்பாளர்களதும் உரிமைகள் பாதிக்கப்படுமெனவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள் ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பிரதித்தலைவர் வண. ஓமல்பி சோபித தேரோ - பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில், படைத்தரப்பு -மற்றும் பொலிஸாரின் பாதுகாப்பு இல்லாமல் சூனியப் பிரதேசத்துக்குள் வாக்களிப்பு நிலையங்களை வைத்தால், அது பெறுமதியானதாக இருக்குமா எனவும் கேள்வியெழுப்பினார்.

அத்துடன், சகல கட்சிகளையும் இணைத்து தேசிய அரசாங்கம் அமைப்பதுதான் தமது கட்சியின் இலக்கு எனக்கூறும் இவர், இந்த அரசாங்கத்தில் பௌத்தமதக் கோட்பாடுகள்தான் முக்கியமானவை எனவும் தெரிவித்தார்.

ஜாதிக ஹெல உறுமயவின் முதன்மை வேட்பாளர் வண.எல்லாவெல மெத்தானதேரோ -தமது கட்சி மூன்று பிரதான கொள்கைகளைக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அதில் முதலாவதாகப் பௌத்த மதக்கோட்பாடுகளை உள்ளடக்கியதான இலங்கையின் அபிவிருத்தி, சிங்கள மக்களின் பண்பாடுகளைப் பாதுகாப்பதற்கான கொள்கை, சமூக அபிவிருத்தி போன்றவையே அவையாகும்.

அத்துடன், இலங்கையை ஒருமைப்பாட்டுடன் தொடருவதன்மூலம், சகல சமூகங்களும் சமாதானமாக வாழ வழிசெய்யப்படுமெனவும் தெரிவித்தார்.

# தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்பு!

(கொழும்பு)



தேசிய லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாக பொறுப்பேற்றிருப்பதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்தது.

இதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

தேசிய லொத்தர்சபை - பொருளாதார சீர்திருத்த, விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சின் கீழ் செயற்பட்டு வந்தது.

தேசிய லொத்தர்சபையின் நிதி - தேர்தல் நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து, ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

லொத்தர்சபை - பிரசாரம் என்ற போர்வையில், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் குழு ஒன்றுக்கு லொத்தர்சபையிலிருந்து ஒவ்வொருவருக்கும் 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டதாகவும்,

மேலும் 25 லட்சம் ரூபா தேவையற்ற பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கும், பல மாநகரசபை உறுப்பினர்களுக்கு முச்சக்கரவண்டிகள் கொள்வளவு செய்வதற்கும் பணம் வழங்கப்பட்டிருக்கிறது எனறும் ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

### ஹவாட் சட்டக்கல்லூரியின்

# புத்தகநிலையத் தலைவராக இலங்கைத் தமிழர் தெரிவு!

(வொஷிங்டன்)

அமெரிக்க குடியுரிமை பெற்ற இலங்கையைச் சேர்ந்த தமிழர் ஒருவர் - அமெரிக்காவின் பிரபல ஹவாட் சட்டக்கல்லூரியின் புத்தக நிலையத் தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.

விக்னராஜா என்ற தமிழரே இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள் ளார். பத்து வேட்பாளர்கள் போட்டியிட்ட இந்தப் பதவிக்கு இவர் தெரிவானார். இந்தப் புத்தகநிலையத்தின் 118 ஆவது தலைவராக இவர் தெரிவுசெய்யப்பட்டார். அத்துடன், அவர் ஹவாட் சட்டக்கல்லூரியின் இரண்டாம் வருட மாணவனுமாவார்.

கல்விசார் புலமையும், எழுத்தாற்றலும் காணப்பட்டதுடன், இந்த ஹவாட் புத்தக நிலையத்தின் பிரதம ஆசிரியராக கடந்த வருடம் ஒகஸ்ட் மாதத்திலிருந்து இருந்து வருகின்றமையாலேயே இவர் தெரிவானார்.

விக்னராஜா இலங்கையில் பிறந்தவராவார். இவருக்கு 3 வயது இருக்கும்போது, இவரது குடும்பத்தினருடன் அமெரிக்கா சென்றார். இவர் வளர்ந்தது அமெரிக்காவின் பல்ரிமோ என்ற மாநிலத்திலாகும்.

அமெரிக்காவில் தத்துவம், மற்றும் அரசியல் விஞ்ஞானத்தை ஜெல பல்கலைக்கழகத்தில் 1998 ஆம் ஆண்டு கற்றுப் பட்டம் பெற்றார். அதன்பின்னர் - மருத்துவம் மற்றும் சட்டம் தொடர்பான பட்டத்தினை லண்டனிலுள்ள இங்ஸ் கல்லூரியில் முடித்தார்.

# தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட பிரதான கட்சிகள் துரித நடவடிக்கை

(கொழும்பு)

பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள்- தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை தயாரித்து இந்த வாரம் வெளியிடுவதற்கான நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமய- நேற்று முன்தினம் கண்டியில் நடத்திய முதலாவது பிரசாரக்கூட்டத்தில் தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது.

களனி ரஜமகா விகாரையில் ஆரம்பமான ஜாதிக ஹெல உறுமயவின் வாகனப்பேரணி, கண்டி தலதா மாளிகைக்கு அருகே சென்றடைந்ததும், தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்டது.

இந்த மாளிகைக்கு முன்னதாக களனி ரஜமகா விகாரையில் பூஜை வழிபாடுகளும் நடத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் ஜாதிக ஹெல உறுமய கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கொலன்னாவ சிறிசுமங்கல தேரர், கலாநிதி சோபித தேரர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜாதிக ஹெல உறுமயவின் தேர்தல் விஞ்ஞாபனம் பன்னிரெண்டு முக்கிய அம்சங்களை உள்ளடக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இலஙகை நாட்டின் ஆட்சி-பௌத்த தர்மத்தின் அடிப்படையில் உருவாக்கப்படவேண்டும். அதன் மூலம்தான் ராஜ்யமுறை ஏற்படுததபபடவேண்டும். நாட்டின் ஒற்றையாட்சி மற்றும் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கும் ஹெல உறுமயவின் விஞ்ஞாபனத்தில் மதமாற்றங்களை தடுக்கவும் பரிந்துரை செய்யப்பட்டள்ளது. இலங்கையின் இராணுவம் மற்றும் பொலிஸ்துறையில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. சிங்கள மக்களின் உரிமை உறுதிப்படுத்தப்படவேண்டும். அதேநேரம் ஏனைய மக்களின் உரிமைகளும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பனவும் ஜாதிக ஹெல உறுமயவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனம் தயாரிக்கப்பட்டுவிட்டதாகவும், இன்னும் சில தினங்களில் அது வெளியிடப்படும் என்றும் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனம் இந்த வாரம் வெளியிடப்படவுள்ளது. இந்தத் தேர்தல் விஞ்ஞாபனம் ஐந்து அம்சக் கொள்கைத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்டதாக இருக்கும் என்றும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிறேம் ஜெயந்த் தெரிவித்தார்.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் அங்கீகாரத்துக்காக இந்த தேர்தல் விஞ்ஞாபனம் சமர்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (01)



# இங்கிலாந்து அணியை தோற்கடித்ததன்மூலம் மேற்கிந்தியத்தீவுகள் இறுதிப்போட்டிக்கு தகுதி




ICC U/19 CRICKET WORLD CUP
BANGLADESH 2004

(டாக்கா)

பங்களாதேஷில் நடைபெற்றுவரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில்- டாக்காவில் நேற்றுமுன்தினம் மேற்கிந்தியத் தீவுகள்- இங்கிலாந்து அணிகளுக்கிடையே நடந்த அரையிறுதிப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் 94 ஓட்டங்களால் இங்கிலாந்தை வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி 50 ஓவர்கள் நிறைவில் இவ்வணி 6 விக்கெட்டுக்களை இழந்து 249 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்தியத்தீவுகள் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான மறாஜ் ஓட்டமெதுவும் பெறாமலும், முதலாவது விக்கெட்டான சைமன்ஸ் எல்.பி.டபிள்யூ முறையில் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும், அடுத்துவந்த வீரர்கள் சிறப்பாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர்.

இந்த அணி சார்பில் மார்ஷல் 45, புடாடின் 51, ராம்தின் 72, சமல்கான் ஆட்டமிழக்காமல் 49 பந்துகளில் 60 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஹரிசன் 3, பிறஸ்னன், றைற் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

250 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பதிலளித்து ஆடிய இங்கிலாந்து அணி 39.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 155 ஓட்டங்களை மட்டும் எடுத்ததனால், இந்த அணி 94 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இந்த அணி சார்பாக குக் 33, பிறஸ்னன் 41, ஹில்ட்றெத் 27 மூவருமே கூடுதலான ஓட்டங்களைப் பெற்றனர். மற்றைய வீரர்கள் பத்து ஓட்டங்களுக்குக் குறைவாகவே பெற்றனர்.

பந்துவீச்சில் ராம்பவுல் 3, சைமன்ஸ் 2, கான் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி பாகிஸ்தானுடன் இறுதிப் போட்டியில் மோதவுள்ளது.

## விளையாட்டு

# கிரிக்கெட் தரவரிசை ஜக்கலிஸ் முதலிடம்!



சாம்சங் நிறுவனம் கிரிக்கெட் வீரர்களின் தர வரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதன்படி துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க வீரர் கலிஸ் 98 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தில் உள்ளார். கில்கிறிஸ்ட் (அவுஸ்ரேலியா) 95 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்திலும், டெண்டுல்கர் (இந்தியா) 81 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்திலும் உள்ளனர். லக்ஷ்மன் 65 புள்ளிகள் பெற்று 8 ஆவது இடத்தில் உள்ளார்.

பந்துவீச்சில் என்ரினி (தென்னாபிரிக்கா) 162 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தில் உள்ளார். பிரட் லீ (அவுஸ்ரேலியா) 2 ஆவது இடத்திலும், பிரட் வில்லியம்ஸ் (அவுஸ்ரேலியா) 3 ஆவது இடத்திலும், அகர் (இந்தியா) 4 ஆவது இடத்திலும் உள்ளனர்.

டெஸ்ட்டில் லாரா 141 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தில் உள்ளார். டிராவிட் 112 புள்ளிகளுடன் 6 ஆவது இடத்திலும், பந்துவீச்சில் என்ரினி 118 புள்ளிகள் பெற்று முதலிடத்தில் உள்ளார். கும்ளே 77 புள்ளிகள் பெற்று 8 ஆவது இடத்தில் இருக்கிறார்.

ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் அணிகள் வரிசைப் பட்டியலில் - 76 புள்ளிகள் பெற்றுள்ள அவுஸ்ரேலியா தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. 2 ஆவது இடத்தில் தென்னாபிரிக்க அணி 68 புள்ளிகளுடன் உள்ளது.

3 ஆவது இடத்தில் பாகிஸ்தானும் (60 புள்ளிகள்), 4 ஆவது இடத்தில் இங்கிலாந்தும் (53 புள்ளிகள்), இந்திய அணி 40 புள்ளிகளுடன் 5 ஆவது இடத்திலும் உள்ளன.

# இந்தியாவுக்கு எதிரான போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணி 5 ஆம் திகதி அறிவிப்பு!

(இஸ்லாமாபாத்)

இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி கராச்சியில் நடைபெறவுள்ளது.

ஒருநாள் போட்டித் தொடரின் முதல் இரண்டு ஆட்டங்களுக்கான பாகிஸ்தான் அணி நாளை அறிவிக்கப்படும் என்றும், பயிற்சி முகாமில் இடம்பெறாத வீரர்களும் அணியில் தேர்வுசெய்யப்படுவார்கள் என்றும் பாகிஸ்தான் தேர்வுக்குழுத் தலைவர் வாசிம் பாரி தெரிவித்தார்.

# வடமராட்சி வலய பாடசாலைகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள்!

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த முதலாம் திகதி விக்னேஸ்வரா மைதானத்தில் நடைபெற்றது.

15 வயதிற்குட்பட்ட பிரிவில் வட இந்து மகளிர் கல்லூரியும், மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும் மோதின. இதில் வட இந்து மகளிர் கல்லூரி 20:4 என்ற கோல் கணக்கில் வென்று சாம்பியனாகியது. 3 ஆம் இடத்துக்கு வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியும், கம்பர்மலை இந்துக் கல்லூரியும் மோதின. இதில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி 10:5 என்ற கோல் கணக்கில் வென்றது.

17 வயதுப் பிரிவில் முதலாம் இடத்துக்கு வட இந்து மகளிர் கல்லூரியும், மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலையும் மோதின. இதில் வட இந்துமகளிர் கல்லூரி 25:12 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது. 3 ஆம் இடத்துக்கு விக்னேஸ்வரா கல்லூரியை எதிர்த்து சென்.தோமஸ் றோமன் கத்தோலிக்க பாடசாலை மோதியது. இதில் விக்னேஸ்வரா கல்லூரி 15:08 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

19 வயதுப் பிரிவில் முதலாம் இடத்துக்கான போட்டியில் வட இந்து மகளிர் கல்லூரியும், மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலையும் மோதின. இதில் மெதடிஸ்த பெண்கள் உயர் பாடசாலை 29:18 என்ற கோல் கணக்கில் வென்று சம்பியனாகியது. 3 ஆம் இடத்துக்கு விக்னேஸ்வரா கல்லூரியை எதிர்த்து விக்னேஸ்வரா கல்லூரி மோதியது. இதில் விக்னேஸ்வரா கல்லூரி 23:17 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இதில் வெற்றியீட்டிய முதல் இரு அணிகளும் யாழ்.மாவட்டத்திற்கு தெரிவாகியுள்ளன. இதற்கு மத்தியஸ்தர்களாக க.கனகராஜா, ப.பார்த்தீபன், பா.ஜெயகேசவன், கௌசிகன் ஆகியோர் கடமையாற்றினர். (12)



பாகிஸ்தான் தொடருக்காக டெண்டுல்கர் மும்பாயில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டுவருகிறார். அப்போது அவர் தனது மகன் அர்ஜுனுக்கு துடுப்பாட்டம் குறித்து பயிற்சியளிப்பதைக் காணலாம்.

# ஐ.சி.சியின் கறுப்புப் பட்டியலில் கங்கூலி, ராவிட்டின் பெயர்கள்!



சர்வதேச கிரிக்கெட் சபை - வீரர்களுக்கு பல்வேறு விதிமுறைகளை 2004 ஆம் ஆண்டு விதித்து செயல்படுத்தி வந்தது. இந்த நிலையில் இதுவரை விதிமுறைகளுக்கு முரணபாடாக செயற்பட்ட வீரர்களின் பட்டியலை (கறுப்புப் பட்டியல்) ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது.

இந்த கறுப்புப் பட்டியலில் இந்திய வீரர்கள் கங்கூலி, டிராவிட், இர்பான் பதான் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். அதிகபட்சமாக தென்னாபிரிக்க வீரர்கள் 5 பேர் இடம்பெற்றுள்ளனர்.

பாகிஸ்தான் வீரர்கள் அக்தர், ரஷீத் லத்தீப், யுகானா ஆகியோர் இந்த பட்டியலில் உள்ளனர். அவுஸ்ரேலிய அணியில் கில்கிறிஸ்ட் மட்டும் இடம்பிடித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் ஒருவர்கூட இந்த கறுப்புப் பட்டியலில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கர்நாடக பெல்லாரித் தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடவுள்ளார்

(டெல்கி)

நாடாளுமன்றத்துக்கு ஏப்ரல் 20, 26 மே 5, 10 ஆம் திகதிகளில் 4 கட்டமாக தேர்தல் நடக்கிறது.

வேட்பாளர்களைத் தெரிவுசெய்யும் பணியில் பாரதீய ஜனதா, காங்கிரஸ் தலைவர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அடுத்தவாரம் வேட்பாளர்கள் விபரம் முழுமையாகத் தெரிந்துவிடும்.

பாரதீய ஜனதா மேலிடம், தேர்தலில் போட்டியிடத் தகுதியுடையவர்களின் பட்டியலை மாநில கட்சித் தலைமையிடம் இருந்து கேட்டுப் பெற்றுள்ளது. அந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளவர்கள் குறித்து பரிசீலனை நடந்துவருகிறது.

வரும் 10 ஆம் திகதிக்குள் தமிழக பாரதீய ஜனதா வேட்பாளர்கள் விபரம் தெரிந்துவிடும். 15 ஆம் திகதிக்குள் எல்லா வேட்பாளர்களையும் அறிவித்துவிட்டு பிரசாரத்தைத் தொடங்க பாரதீய ஜனதா மூத்த தலைவர்கள் வியூகம் வகுத்துள்ளனர்.

காங்கிரஸ் வேட்பாளர்களைத் தேர்வுசெய்ய 15 பேர் கொண்ட தேர்தல் பணிக்குழு ஈடுபட்டுள்ளது. அதில் கடும் இழுபறி நீடிப்பதால், காங்கிரஸ் வேட்பாளர்களை விரைவில் அறிவிக்கமுடியாத நிலையில் சோனியா உள்ளார்.

பாரதீய ஜனதா, காங்கிரஸ் இரண்டிலும் மூத்த தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகள் மட்டுமே உறுதியாகியுள்ளன. அந்தத் தொகுதிகளில் மட்டும்தான் சுறுசுறுப்பைக் காணமுடிகிறது.

பாரதீய ஜனதாவுக்கு தக்க பதிலடி கொடுக்க வேண்டுமானால், பிரியங்கா, ராகுல் காந்தி இருவரையும் பிரசாரக் களத்தில் இறக்கவேண்டுமென்று வலியுறுத்தப்பட்டது. பிரியங்கா பிரசாரம் செய்தால் காங்கிரசுக்கு பலம் கிடைக்கும் என்று கருத்துக் கணிப்புக்களும் தெரிவித்தன.

எனவே - பிரியங்கா, ராகுல் காந்தி இருவரையும் நாடெங்கும் பிரசாரத்தில் ஈடுபடுத்தி - பெரும் எழுச்சி அலையை உருவாக்க சோனியா நினைத்துள்ளார். இதற்கிடையே பிரியங்கா, ராகுல் இருவரையும் தேர்தலில் போட்டியிடவைக்கவும் மீண்டும் முயற்சி நடந்துவருகிறது.

ராகுல் காந்தியை கர்நாடக மாநிலத்தில் உள்ள பெல்லாரி நாடாளுமன்றத் தொகுதியில் நிறுத்தவேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது. கர்நாடக மாநில காங்கிரஸ் தலைவர் ஜனார்த்தன் பூஜாரி இந்த இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.



2 மாதத்துக்கு முன்பே ராகுல் காந்திக்காக கோரிக்கை விடுத்த அவர் நேற்றுமுன்தினம் மீண்டும் டெல்கிக்குச் சென்று காங்கிரஸ் தலைவர்களிடம் இதை வலியுறுத்தினார். காங்கிரஸ் மூத்த தலைவர்கள் ஜனார்த்தன் பூஜாரியின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டனர்.

ஆனால், ராகுலைப் போட்டியிட வைக்க சோனியா சம்மதிப்பாரா என்பது தெரியவில்லை.

# ஆசிய ஊழல் நாடுகளில் இந்தியாவிற்கு 2 ஆவது இடம்

ஆசியக் கண்டத்தில் உள்ள நாடுகளில் ஊழல் எங்கு அதிகமாக மலிந்து கிடக்கிறது என்பதைக் கண்டறியக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. ஹொங்ஹொகாங்கில் உள்ள ஒரு நிறுவனம் இந்தக் கருத்துக் கணிப்பை நடத்தி, பட்டியல் தயாரித்தது.

அந்தப் பட்டியலில் இந்தோனேஷியா முதலிடத்தில் இருக்கிறது. அந்த நாட்டில் ஊழல் நடக்கும் சதவீதம் 10 இற்கு 9.25 சதவீதமாக உள்ளது.

இந்தியா 8.9 சதவீதத்துடன் ஊழல் பட்டியலில் 2 ஆவது இடத்தில் இருக்கிறது. வியட்நாம் சற்று குறைவான புள்ளிகளுடன் 8.7 சதவீதம் பெற்று 3 ஆவது இடத்தில் உள்ளது.

பிலிப்பைன்ஸ், தாய்லாந்து, மலேஷியா நாடுகள் முறையே 4 ஆவது, 5 ஆவது, 6 ஆவது இடங்களில் இருக்கின்றன. அதற்கு அடுத்த இடங்களை சீனா, தென்கொரியா, தைவான், ஹொங்ஹொங், ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகள் பிடித்துள்ளன.

உலக நாடுகளில் ஊழலில் முதலாவது இடத்தில் பங்களாதேஷ் உள்ளது. ஆனால் ஆசிய ஊழல் நாடுகள் விபரம் எடுக்கப்பட்டபோது பங்களாதேஷ் சேர்க்கப்படவில்லை.

கருத்துக்கணிப்பு ஒப்பீட்டு நிலவரப்படி கடந்த ஆண்டுகளை விட இப்போது இந்தியாவில் ஊழல் குறைந்திருப்பது தெரியவந்துள்ளது,





தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் நேற்று நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதைப் படத்தில் காணலாம்.

# கடந்த காலத்தில் முழுமையான வாக்களிப்பில்லை இம்முறை காலத்தேவை உணர்ந்து வாக்களியுங்கள்

## நல்லூர் கோட்டப் பொறுப்பாளர் ஈஸ்வரன்

கடந்தகாலங்களில் வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற தேர்தல்களில் பெரும்பாலும் முழுமையான வாக்களிப்பு என்பது சாத்தியமில்லாத ஒன்றாகவே காணப்பட்டது. எனினும், இன்றைய சூழலில் காலத்தின் தேவைகருதி அனைவரும் ஒரு அணியின்கீழ் நிற்பதால், முழு அளவிலான வாக்களிப்பை மக்கள் மேற்கொண்டு முழு வெற்றியையும் தீர்மானிக்க வேண்டும் என, யாழ் - நல்லூர் கோட்ட பொறுப்பாளர் பொ. ஈஸ்வரன் தெரிவித்தார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற பொது அமைப்பு பிரதிநிதிகள் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது-

தேர்தல் காலத்தில் கிடைக்கும் தமிழின வெற்றியை சர்வதேசம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

அந்த நிலைக்கு ஒவ்வொரு நிறுவனங்களும் தம்மால் இயன்றளவு பாடுபடுதல் வேண்டும். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் அதிக எதிர்பார்ப்புடன் தமிழ் சமூகமுள்ளது. அதற்காக அனைத்து அமைப்புக்களும் பங்களிக்க வேண்டும். கடந்த காலங்களில் தேர்தல்கள் ஓர் ஒழுங்கமைப்பில் இடம்பெறவில்லை. ஒன்று முழுமையாக வாக்களிப்பில்லை மற்றது கள்ள வாக்கு மோசடி போன்றவையும் இடம்பெற்றன. இம்முறை நாம் அனைவரும் இதனைத் தடுத்து கூட்டமைப்பு வெற்றிக்குப் பாடுபடுதல் வேண்டும்.

யாழ். குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் சர்வதேச அங்கீகாரத்துடன் வெற்றி என்பது உறுதி. தோல்வி என்பதற்கு இங்கு இடமில்லை. நகர்ப்புறமான யாழ். பகுதியில் கூட்டமைப்பு வெற்றி - குடாநாட்டு அரசியல் வெற்றியில் பெரும்பங்களிப்பை வழங்கும. எனவே அனைவரும் வாக்களிக்கவேண்டும். இன்று அனைவரின் நெஞ்சங்களிலும் வீடு வேண்டும் எனும் எண்ணமுள்ளது. ஆகையால், இன்று வீதியில் இறங்கி ஒவ்வொருவரும் களத்தில் இறங்கி தமிழின வெற்றிக்கு உழைக்க வேண்டும்.

ஏனெனில், நாங்கள் இன்று தேர்தலில் காண்பவர்கள் அரசியல் களத்திலும், போர்க்களத்திலும் மக்களுக்காகப் பாடுபட்டவர்கள், எதிர்காலத்தில் பாடுபடவுள்ளவர்கள். இத் தேர்தல் வெற்றியூடாக நாம் பெரிய விடயங்களை சமகாலதேவைக்கு ஏற்பபெறவுள்ளோம்.

தேர்தலுக்கு நாம் கூட்டமைப்புக்கு ஆதரவு தெரிவிப்பதுடன், எமக்குத் தேவைகள் உள்ளன. தேர்தல் மோசடி மூலம் தமிழின அழிவுக்கு வித்திடுபவர்கள் வெற்றிபெற ஏதுவாக இருந்துவிட முடியாது. எனவே, காலத்தின் தேவை இன்று மக்கள் முன் வந்துள்ளது. நம்பிக்கையுடன் நாம் எதிர்கொள்வோம். சேர்ந்து உழைப்போம் எமது வெற்றியை உறுதிசெய்வோம் என்றார்.

# அயல் வீட்டுத் தகராறு; அடிதடியில் மூவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

நீதிமன்றில் முறைப்பாடு செய்தமையைப் பொறுக்கமுடியாத அயல் வீட்டார் ஆள்வைத்து அடித்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆனைக்கோட்டை நான்காம் கட்டையடியைச்சேர்ந்த கனகையா ரட்ணராஜா (வயது-63), ரட்ணராஜா செல்வராணி (வயது-54), ரட்ணரஜா சத்தியசீலன் (வயது-26) ஆகிய மூவருமே காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது-

நீண்டகாலமாக இரு குடும்பங்களுக்கிடையே காணப்பட்ட பிரச்சினை தொடர்பாக, யாழ். நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்த ரட்ணராஜாவை சிலர் நெடுநாட்களாக அச்சுறுத்திவந்தனர்.

நேற்றுமுன்தினம் யாழ். நீதிமன்றில் இவ் வழக்கு விசாரணை இடம்பெற்றது. இதனால் ஆத்திரமடைந்த எதிரணி 15 பேர் வரையிலான இளைஞர்களைத் திரட்டிவந்து வீதியில்சென்று கொண்டிருந்த மூவரையும் தாக்கிக் காயப்படுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் கீழ் குறிப்பிட்டவர்களை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரம் வருமாறு.

கஸ்பர் வில்பேட் (குருநகர்), கணேசன் புனிதவதி (கொழும்புத்துறை), ம.நிலுக்ஷி (மல்லாகம்), ரட்ணானந்தன் பவளக்கொடி (தெல்லிப்பளை), கிட்டிணன் விமலராசா (அச்சுவேலி), பாலராசா இவோனி (சாவகச்சேரி), எனோக் மெற்றில்டா (பெரியவிளான்), துரைராசலிங்கம் சந்திரலீலா (மல்லாகம்), ஜெயக்குமார் செல்வலட்சுமி (சுழிபுரம்), க.பிரான்சிஸ் (டச்சுவீதி, உடுவில்), சதாசிவம் அங்கயற்கண்ணி (உரும்பிராய் தெற்கு),

குலசேகரம்பிள்ளை ராசமலர் (சுழிபுரம்), சங்கரப் பிள்ளை லட்சுமி (மானிப்பாய்), வேலுப்பிள்ளை ராஜேஸ்வரி (யாழ்ப்பாணம்), கமலாதேவி நாகரத்தினம் (யாழ்ப்பாணம்), க.ரகுபதி (ஊரெழு), தேவராசா முத்துலட்சுமி (அல்லைப்பிட்டி)

திருமேனிப்பிள்ளை மாணிக்கரத்தினம் (வல்வெட்டித்துறை), ருசீந்திரன் ஜெயலட்சுமி (வல்வெட்டித்துறை), பழனியாண்டி பாலேஸ்வரன் (வல்வெட்டித்துறை), வரப்பிரகாசம் மேரி மெலீன் (பருத்தித்துறை), செபமாலை மாகிறட் (பொலிகண்டி), அருளானந்தன் லூர்த்தம்மா (குருநகர்),

ரத்தினம் கணேசமூர்த்தி (எழுதுமட்டுவாள்), ம.ஸ்ரான்லி (எழுதுமட்டுவாள்), செல்லக்குட்டி ஜசிந்தவநாதன்( எழுதுமட்டுவாள்), அருளானந்தராசா பத்மராணி (நாகர்கோவில்), தம்பாப்பிள்ளை செல்வரத்தினம் (தும்பளை), சூசைதாசன் லீலாவதி (மிருசுவில்), ஆனந்தம் விமலேஸ்வரி (தும்பளை).

## திருப்பணி வேலைகள் ஆரம்பம்

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு அருள்மிகு பனையடிப் பிள்ளையார் ஆலயத் திருப்பணி வேலைகளுக்காகப் பாலஸ்தாபனம் செய்யப்பட்டிருந்த மேற்படி ஆலயத்தின் சேதமடைந்த தூபி மற்றும் மண்டபங்கள் புனரமைக்கப்படவுள்ளதுடன் வைரவர் ஆலயம் தனியாகவும் அமைக்கப்படவுள்ளது.

(24)




# சாவகச்சேரி மருத்துவமனையில் வைத்திய வசதிகள் இன்மையால் மீளக் குடியமர்ந்தவர்கள் விசனம்

(வடமராட்சி)

சாவகச்சேரி மருத்துவமனை புனரமைப்புச் செய்வதற்கு எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வராததால் இதுவரை மீளக் குடியமர்ந்த மக்கள் பெரிதும் அல்லல் பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையால் சேதமடைந்த நிலையிலும் தளபாடங்கள் களவாடப்பட்ட நிலையிலும் மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு எஞ்சியுள்ள கட்டடத்தில் மருத்துவ சேவை நடைபெற்று வருகின்றது.

இங்கு மருத்துவ சேவைக்குரிய இட வசதிகள், உபகரணங்கள் இல்லாத நிலையிலும் வைத்தியசேவை நடைபெற்று வருகின்றது.

ஆகவே, இந்த வைத்தியசாலையை புனரமைப்பதற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும் என மீளக் குடியமர்ந்த மக்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (17)

# நந்தாவில் குளம் புனரமைப்புக்கு மூன்று மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

நந்தாவில் குளம் மற்றும் வாய்க்கால்களைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கென மூன்று மில்லியன் ரூபாவரை ஒதுக்கப்பட்டுள்ளதாக வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன அபிவிருத்திப் பிரிவினர் தெரிவித்தனர்.

இப்பணிகள் இடம்பெறவுள்ள பகுதிகளைப் பார்வையிடுவதற்காக இப் பணியகத்தின் அதிகாரிகள் குழுவொன்று இன்று. அந்தப் பகுதிக்கு விஜயம் செய்யவுள்ளது.

நந்தாவில் குளமானது மழை நீரைத் தேக்குவதற்கும், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்தப்படுவதால் அதனைப் புனரமைக்கும் பணி இன்றியமையாததாகவுள்ளது.

இந்தக் குளத்தின் அணைகள் தூர்ந்த நிலையிலும் வாய்க்கால்கள் சிறைவுற்ற நிலையிலும் காணப்படுகின்றன. இதனால் இக் குளத்தை மறுசீரமைப்பதற்கு அதிக பணம் செலவாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தனியார் கல்வி நிலையம் தீ வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுப் பகுதியில் அமைந்துள்ள புதிய சக்தி கல்வி நிலையம் கடந்த சனிக்கிழமை இரவு விஷமிகளால் தீயிடப்பட்டது

தனியார் கல்வி நிலையங்களின் போட்டியே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(111)

## பிரதம எழுதுநர் நியமனம்

(மட்டுவில்)

யாழ். மாவட்டச் செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள அலுவலகத்துக்குப் பிரதம எழுதுநராக செல்வி. என்.செல்லையா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை காலமும் பிரதம எழுதுநராக கடமையாற்றிய ஆபரம் சோதி ஓய்வுபெற்றதையடுத்தே, அந்தத் திணைக்களத்தில் கடமையாற்றிய சிரேஷ்ட அலுவலரான செல்வி என்.செல்லையா இந்தப் பொறுப்பை ஏற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

## தேர்தல் சுவரொட்டிகளை பொலிஸார் அகற்றினர்

ஆனைக்கோட்டை பகுதியில் கூட்டமைப்பின் தேர்தல் சுவரொட்டிகள் பொலிஸாரால் கிழித்தெறியப்பட்டன.

கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கத்தின் படத்துடன் கூடிய சுவரொட்டிகள் இந்தப் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தன. இதனை நேற்று - அதிகாலை வேளையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அகற்றினர். (46)

## மருதனார்மடத்தில் வெல்ல உற்பத்தி ஆரம்பமாகவுள்ளது

கோண்டாவில் பனை, தென்னை அபிவிருத்திச் சங்கத்தால் மருதனார்மடத்தில் அமைக்கப்பட்டுள்ள வெல்ல உற்பத்தி நிலையம் தமது உற்பத்தியை மிக விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

உற்பத்தி தொடர்பான செயற்பாடுகள் பூரணமாகவுள்ள இந்த நிலையில் வைபவ ரீதியாக இதன் செயற்பாடுகள் இந்த மாத நடுப்பகுதியில் இடம்பெறவுள்ளதாக, யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி தெரிவித்தார். (91)

# வடிசாலையை உரியவரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை

திக்கம் வடிசாலையை மீண்டும் உரியவர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்றுவருகின்றன. இது பற்றி மேலும் தெரியவருவதாவது -

பிரதம மந்திரியின் மத்திய ஆலோசனைக்கான குழு திக்கம் வடிசாலையைத் திரும்பவும் வடமராட்சி கொத்தணியிடம் கையளிக்கவேண்டும் எனத் தீர்மானம் எடுத்துள்ளதாக, இந்து சமய விவகார கலாச்சார அமைச்சின் செயலாளரினால் தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக - திருகோணமலை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் இ.இளங்கோவன் தெரிவித்தாக, யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் சு.கணேசமூர்த்தி தெரிவித்தார்.

இது தொடர்பாக வடமராட்சி கொத்தணியிடம் அறிவித்து மேற்படி நிறுவனத்தைப் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரியவர்களைக் கேட்டுள்ளதாகவும் யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவித்தார்.

(91)




# ஓவியன் ஒருவருக்கு கற்பனைத் திறனும் எதையும் ரசிக்கும் ஆற்றலும் சிறந்ததாகும்

கிரிதரன் என்பவரை 24/4 மதவடி ஒழுங்கை, வண்ணார் பண்ணை எனும் முகவரியில் அமைந்த அவரது வீட்டில் சந்தித்தேன். 1985 ஆம் ஆண்டில் இருந்து இன்றுவரை ஓவியங்கள் வரைவதைப் பல கண்ணோட்டத்தில் நின்று பார்த்து சமூகத்திற்குத் தேவையானவற்றை முதலீலும், இரண்டாவது பட்சத்தில் தொழிலாகவும் செய்துகொண்டு வருகின்றார். கிரி தனது ஓவியக் கலைபற்றிக் கூறும்போது-

எனது ஓவியப்பயணத்தின் ஆரம்பத்தில் ஆர்வம் ஊட்டியவை - பல முன்னோர்கள் வரைந்த ஓவியங்கள்தான். ஆரம்ப காலத்தில் கைக்கு கிடைக்கும் பொருட்கள் எதுவானாலும் அதன் மேலும் ஓவியம் வரைந்து தமது திறமைகளை நிரூபித்தார்கள். அவர்கள் அவர்களது சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப வரைந்தார்கள். குப்பைகளாக இருந்தாலும், அதனுள்ளும் நல்லதைத் தேடும் திறமை ஓவியத்திற்கு மட்டும் உள்ளது.

ஆரம்பத்தில் ஓவியர் மணியம் என்பவரிடம் பல மாணவர்கள் தொழில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும்போது, நானும் ஒரு மாணவனாகச் சேர்ந்துகொண்டு, பல 'கட்டவுட்டில்' அளவிற்கேற்ப படம் வரைதல், துணிகளில் படம் வரைதல், பலகையில் பெயர்கள் எழுதுதல். இப்படியாக வளர்ந்து வந்தேன். மணியம் என்பவரிடம் ஓவியம் வரைய பழகியவர்கள், ஓவியம் வரைதல் திறமையுள்ளவர்களாக மட்டும் அல்ல நல்ல கற்பனைத் திறனும், எதையும் ரசிக்கக்கூடிய ஆற்றலும் எல்லோரிடமும் நிறையவே உண்டு. அதனால்தான், இன்றுவரை திறமையாகச் சலிப்புத்தன்மை இன்றி வரையக் கூடியதாக இருக்கின்றது.

சிங்கப்பூர், மலேசியா சென்று மூன்று வருடங்கள் இதே தொழிலில் இறங்கினேன். அதனால், பல அங்கேயுள்ள வித்தியாசமான ஓவியங்களின் திறனை அங்கேயுள்ளவர்களினூடாகவே பெறக்கூடியதாக இருந்தது. இரண்டு வருடங்கள் மட்டும்தான் அங்கேயிருக்க முடிந்தது. ஏனெனில், எங்களுடைய மண்ணில் இந்தக் கலையை வளர்க்கவேண்டும் என்பதனால், எனது மண்ணிலே இருக்க விரும்பி திரும்பி வந்துவிட்டேன்.

பணத்திற்காக கோயில் திரைச்சேலைகள், வரைபடங்கள, உருவப் படங்கள், கட்டவுட், பெயர்ப்பலகை போன்றவற்றை வரைந்துகொடுத்து, மிகுதியான நேரங்களில் கருத்துள்ள ஓவியங்களை வரைவேன். இதில்தான் எனக்குத் திருப்தி ஏற்படும்.

எண்ணெய் வர்ணம், தண்ணீர் வர்ணம், போன்றவற்றை ஓவியம் வரைவதற்கு நான் பயன்படுத்துவேன். பல ஓவியக் கண்காட்சிகளில் நான் வரைந்த ஓவியங்கள் நிறையவே பார்வைக்காக வைக்கப்பட்டன. பலரின் பாராட்டுக்களையும் எனது ஆக்கங்கள் பாராட்டுப்பெற்றது.

சிங்கப்பூர், மலேசியாவிலும் நிறைய நவீன ஓவியங்கள் வித்தியாசமான முறையில் வரையக்கூடியதாகக் கற்றிருந்ததினால் நவீன ஓவியங்கள் என்னுடைய ஆக்கத்தில் கூடுதலாக இருந்தது. பல நிறங்கள் இல்லாமல் வெள்ளை, கறுப்பு நிறத்தில் கூடுதலாக வரையும் எனது ஓவியங்கள் எனக்கே பிடிக்கும். ஏனெனில் அங்குதான் உயிர் உள்ளது. நிற ஓவியங்களில் ஏதோ ஒன்று இல்லாததுபோல் உள்ளது.

மறுபடியும் 1997 ஆம் ஆண்டு இந்தியா சென்று அங்கே எனது கலையினை வளர்த்தேன். சென்னையில் உள்ள கலை நுணுக்கங்களை ஒவ்வொரு பக்கமாகப் பார்த்து, தொழிலாகவும் செய்து எனது திறமையிலே மேலும் சிறப்பாகச் செய்யக் கூடியதாக இருக்கிறது. எனது ஓவியத்தினைப் பார்த்துவிட்டு, தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள - ஏலங்குறிச்சி என்ற இடத்தில் கிறிஸ்தவ தேவாலயத்தில் இருந்து எனக்கு அழைப்பு வந்தது.

அங்கே சென்று கிறிஸ்தவ காலத்து வரலாற்று துறையினை ஓவியங்களாக வரைந்து கொடுத்தேன். நான் வரைந்த ஓவியத் தினைப் பார்த்து விட்டு கிறிஸ்தவ மதகுருமார் எனக்கு பொன்னாடை போர்த்தி, கௌரவித்துப் பாராட்டினார்கள். பரிசாக நினைவுச்சின்னமும் தந்தனர்.



கள். பரிசாக நினைவுச்சின்னமும் தந்தனர்.

இப்படியாகத் தமிழ் நாட்டில் இருக்கின்றபோது கனடா, ஜேர்மனி போன்ற வெளிநாடுகளிலிருந்து நிறைய வேலைகள் வரும். வெளிநாடுகளில் உள்ளவர்களின் தேவைக்கேற்ப வரைந்து அனுப்புவேன். இதனால், நிறையப் பணம் கிடைகக்கும். ஆனால் திருப்தி ஏற்படாது. ஏனெனில் பணத்தினைவிட பாராட்டும் புகழும் எல்லோரின் கைதட்டலும்தான் எனது வயிற்றினை நிறைய வைக்கும்.

தொடர்ந்து இந்தியாவில் இருக்க முடியாமல் எனது மண்மீதுள்ள அன்பினால் மீண்டும் திரும்பி 2001 ஆம் ஆண்டு இங்கே வந்தேன். தமிழ் நாட்டில் பணம் உழைக்கும் வாய்ப்பிருந்தும், வேறொருவரின் மண்ணில் இருக்க முடியாமல் திரும்பிவிட்டேன். மீண்டும் யாழ்.மண்ணில் கலைப்பயணம் தொடர்ந்தது. எனது இந்த ஓவியம் வரையும் திறனை எல்லோருக்கும் பழக்கவேண்டும் என்ற ஆசை இருந்தவண்ணமேயுள்ளது. வன்னி பெருநிலப்பரப்பில் வாழ்ந்து வந்த நீதன்



நீதனின் ஓவியங்கள் வந்த வண்ணமேயுள்ளன. ஒவ்வொரு இடங்களில் ஒவ்வொரு கலைநுணுக்கங்களை கற்றுக்கொள்ள முடிந்ததினால் யாழ். மண்ணில் வித்தியாசமான முறையில் ஓவியங்கள்வரையக் கூடியதாக இருக்கினறது.

வாழ்க்கை ஓட்டத்தில் பெண்களின் பங்கு மிக முக்கியமாக இருக்கின்றது. குடும்பத்தினைக் கட்டி எழுப்பும் அத்திவாரத்தூணாகவும், ஆண்களுக்கு புத்தி சொல்லும் அறிவு உடையவளாகவும் ஆண்களைக் கட்டிப் போடும் ஆற்றல் பெண்ணில் உளளதால், பெண்களின் மேலுள்ள ஒரு பார்வையால், பலவடிவங்களாக வரையவேண்டும். என்ற கனவு என்மனதில் கிளை பரப்பியிருந்தது. பக்கபலமாக பெண் இருந்தாலும் சமூகத்தின் வாழ்க்கையில் கூடுதலாக கஷ்டப்படுவது பெண்தான். ஆண்களினால் கூடுதலாக துன்பப்படுவதும் பெண்கள்தான். அதனால் என்னவோ பெண்கள் சமூகத்தின் பார்வை அதற் கேற்ப கஷ்டங்களை மனதில்கொண்டு பல ஓவியங்கள் வரைந்திருக் கின்றேன்.

22.06.2002 இல் வடக்கு - கிழக்கு மாகாணம் நடத்திய ஓவியக் கண்காட்சியில் நான் வரைந்த ஓவியமும் வைக்கப்பட்டிருந்தது. பெண்ணியம் என்ற தலைப்புக்கேற்ப அதற்கு அமைய படத்திலுள்ள ஓவியத்தினை வரைந்தேன். ஒரு பக்கம் பணம் மறுபக்கம் நகை இப்படியாக ஒரு தராசின் இரண்டு பக்கத்தின் நடுவில் தலைவிரிகோலமாக ஒரு பெண்ணின் சோகம் வெளிக்காட்டி நிற்பது வாழ்க்கையில் பெண்கள்படும் அவலமும் சீதனக் கொடுமையும், நாளுக்கு நாள் உயிரைத் அவலமும் சீதனக் கொடுமையும், நாளுக்கு நாள் உயிரைத் தாங்களாகவே கொஞ்சம் கொஞ்சமாக குடித்துக்கொண்டு இருக்கின்றார்கள் என்பதேயாகும்.

எல்லோரின் பார்வைகள்தான் கூடுதலாக ஒருவரை ஓவியனாக்கும் எந்தவடிவத்தில் நின்று பார்க்கின்றோம் என்று முதலில் தெளிவாகச் சிந்தித்த பின்பு, அதற்கேற்ப ஒரு கருத்து சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கக் கூடியதாக விரிவுபடுத்தி, தொடக்கமும் இல்லாமல் முடிவும் இல்லாமல் நடுநிலையில் நின்று ஓவியமாக வரைய வேண்டும். ஏனெனில், அந்தக் காலப் பகுதியில் ஒருவர் வரைந்த ஓவியங்கள் இனிவரும் காலங்களில் எடுத்துக்காட்டக்கூடியதாக இருக்கும்.

புதிய பொருட்களிலும், புதிய நகரங்களிலும் இல்லாத பார்வை பழைய கிராமம் ஒன்றில் நிறையவே எனக்கு இருப்பதாகத் தென்படுகின்றது. அதாவது, ஓவியனுக்கு நன்கு ரசிக்கத் தெரியவேண்டும். ரசிக்கும் ஆற்றல் இருந்தால் மட்டுமே சிறந்த உயிர் உள்ள ஓவியங்களை வரையமுடியும். என்று சொல்லிமுடித்தார். எழுந்திருந்து சுற்றுமுற்றும் பார்த்தேன் வீட்டின் சுவர்களில் பலரது ஓவியங்கள் அங்கங்கே நிறை

**நேர்காணல்: செல்வா**

# குப்பைகளில் இருந்து உரம் தயாரிக்கப்படுகின்றது

தமிழகத்தில் மிகப்பெரிய நகரங்களில் ஒன்று திருப்பூர். பனியன் தொழில் ஏற்றுமதிமூலம் தமிழகத்திலேயே அதிகளவு அன்னியச் செலாவணியை ஈட்டிநிற்கும் நகரம் என்ற பெயரும் - பெருமையும் பெற்ற ஊர்.

தினசரி சுமார் நான்கு லட்சம் மக்கள் போடுகின்ற குப்பை கூழங்கள் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகளை என்ன செய்வது என்று விழித்துக்கொண்டிருந்த நேரத்தில், நகராட்சிக்கு வந்து சேர்ந்தது **'IVR Enviro Project Pvt.Ltd'** என்ற ஹைதரபாத் நிறுவனம்.

'குப்பைகளை எங்களுக்குத் தாருங்கள் அதை உரமாக நாங்கள் மாற்றிக்கொள்கிறோம்' என்று அந்த நிறுவனம் சொன்னது. விளைவு.... தமிழ் நாட்டிலேயே முதல் முறையாக மக்கக்கூடிய திடக் கழிவுகளிலிருந்து விவசாயத்துக்கு பயன்படும் உரம் தயாரிப்பதற்கு திருப்பூரிலுள்ள புறநகர்ப் பகுதியான 'கோவில் வழி' என்ற ஊரில் அமைக்கப்பட்டு, உரம் உற்பத்தி செய்து வருகிறது அந்த நிறுவனம்.

தினசரி வரும் குப்பைகள் குவிக்கப்படுகிறது. அதன் மீது **(Bacteria Culture)** பற்றீரியா கல்ச்சர் எனும் தூளினை தண்ணீருடன் கலந்து தெளிக்கிறார்கள். மக்கும் தன்மையை வேகப்படுத்த இது உதவுகிறது. அடுத்த சில நாட்களில், சுற்றுப்புறம் அசுத்தத்தால் பாதிக்காத வகையில் **Wild cat wind row turner** என்ற இயந்திரத்தின் உதவியால் நவீன முறையில் அந்தக் குப்பையை நன்கு கலக்குகிறார்கள். குறிப்பிட்ட நாள் இடைவெளியில் இந்தக் கலக்கல் நடைபெற்று, ஐம்பதாவது நாள் நன்கு உலர்ந்தநிலையில் குப்பை காணப்படும். ஓரளவு மக்கிய குப்பைகளை வளாகத்தின் இன்னொரு பகுதிக்கு எடுத்துச்சென்று, அங்கு மேலும் கழிவுகள் நீக்கப்பட்டு கறுப்பும், காவிக் கலரும் கலந்த மண் போன்ற உரம் கிடைக்கிறது. நூறுடன் குப்பையில் முப்பதுடன்வரை உரம் உற்பத்தியாகிறது.

பொதுவாக குப்பை என்று எல்லாவற்றையும்



கலந்துவிடாமல் பிளாஸ்ரிக் கழிவுகளை தனியாக சேர்த்துவருகிறது. இதனால், சுற்றுப் புறச் சூழல் மாசுபடாமல் பாதுகாக்கின்றோம் என்பது முதல் பெருமை. மொத்தமாகச் சேர்க்கிற பிளாஸ்ரிக் கழிவ்களை வாங்கிக்கொள்கிறது. சென்னையில் உள்ள நிறுவனம் மறுபடியும் பிளாஸ்ரிக் பொருட்களை உருக்கி பல பொருட்களை செய்துவருகிறது. இதனால் சூழலும் பாதுகாக்கப்படுகிறது.

# குடாநாட்டு சந்தை நிலவரம்



| பொருட்கள் | சுன்னாகம் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | நெல்லியடி | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 35/= | 40/= | 40/= | 30/= | 30/= | 30/= | 30/= | 30/= |
| வெண்டிக்காய் | 15/= | 20/= | 40/= | 35/= | 25/= | 15/= | 30/= | 30/= |
| உருளைக்கிழங்கு | 40/= | 50/= | 30/= | 15/= | 40/= | 40/= | 40/= | 40/= |
| கத்தரிக்காய் | 40/= | 40/= | 40/= | 15/= | 35/= | 35/= | 30/= | 25/= |
| பாகற்காய் | 20/= | 35/= | 40/= | 25/= | 35/= | 20/= | 30/= | 40/= |
| கரட் | 20/= | 30/= | 50/= | 30/= | 35/= | 20/= | 40/= | 40/= |
| பீற்றூட் | 10/= | 20/= | 30/= | 30/= | 20/= | 15/= | 30/= | 20/= |
| முருங்கைக்காய் | 60/= | 100/= | 70/= | 80/= | 60/= | 60/= | - | 80/= |
| வெங்காயம் | 20/= | 25/= | 30/= | 22/= | 25/= | 25/= | 32/= | 30/= |
| பச்சை மிளகாய் | 35/= | 35/= | 50/= | 35/= | 30/= | 35/= | 35/= | 40/= |

# நெற்செய்கைக்கு ஒரு பருவ மழையும் ஒரு பருவ வரட்சியும் சிறந்ததாகும்

உலக மக்களில் பாதிக்கப்பட்டவர்களின் பிரதான உணவு நெல் ஆகும். அயன மண்டலப் பருவக்காற்று காலநிலைப் பிரதேசங்களில் நெற்செய்கை பிரதான இடத்தைப் பெற்றுள்ளது. சீனா, யப்பான், இந்தியா, கொரியா, பாகிஸ்தான் பங்களாதேஷ், இலங்கை, பர்மா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், ஆகிய நாடுகளில் நெல் - தானியப் பயிராகும். ஆசியாவிற்கு வெளியே ஐக்கிய அமெரிக்கா, பிரேசில், ஸ்பெயின், தென் பிரான்ஸ், இத்தாலி, எகிப்து ஆகிய நாடுகளில் நெற்செய்கை நடைபெற்று வருகிறது. அயன மண்டல பருவக்காற்று இந்த நாடுகளில் சமவெளிகளிலும், மலைச்சாய்வுகளிலும் நெல் பயிராகின்றது. வண்டல் சமவெளிகளிலும், கடற்கரைத் தாழ்நிலங்களும் முக்கிய நெல் விளைபிரதேசங்களாக இருக்கின்றன. மலைச்சாய்வுகளின் படிமுறைமூலம் - நெற்செய்கை செய்யப்பட்டு வருகின்றது. இந்தப் பிரதேசங்களில் சிறிய விளைநிலங்களில், செறிவான முறையில் நெல் செய்கை செய்யப்படுகிறது.



பருவக்காற்று - ஆசியாவில் நெற்செய்கைக்குச் சாதகமான புவியியல் காரணிகள் பின்வருமாறு -

சமதரையும், நீருட்புகவிடாத கீழ் மண் படையையும் கொண்ட தாழ் நிலங்கள், பருவக்காற்று, ஆசியாவில் அதிக அளவில் இருக்கின்றன. ஆசிய நாடுகளில் பரந்து கிடக்கும் சமவெளிப் பிரதேசங்களில் நெற்செய்கை நடைபெற்று வருகின்றது.

வண்டல் செறிந்த தாழ்நிலங்கள், அதிகளவில் பருவக்காற்று, ஆசியாவில் இருக்கின்றன. இந்து கங்கைச் சமவெளி, யாங்கிசிக் கியாங் சமவெளி, குவாங்கோ சமவெளி, ஐராவதி சமவெளி என்பவையும் இந்தியாவின் கிழக்கு - மேற்கு கரையோரங்களும் இலங்கையின் தாழ் நிலங்களும் நெற்செய்கைக்குச் சாதகமாக அமையும்.

நெற்செய்கைக்கு ஒரு பருவமழையும், ஒரு பருவவரட்சியும் சிறந்ததாகும். பருவக்காற்று ஆசியப்பகுதிகளில் பருவ மழையே கிடைக்கிறது. நீர் தேங்கி நிற்றலும், பயிர் வளரும் காலத்தில் அதிக நீரும் நெற்செய்கைக்கு அவசியம். இந்தப் பிரதேசங்களில் 100- 200 செ.மீ வரையிலான மழைவீழ்ச்சியைப் பெற்றுக்கொள்கின்றன.

நெற்செய்கைக்குத் தேவையான உயர் வெப்பநிலை, பருவக்காற்று ஆசியப் பிரதேசங்களில் கிடைக்கின்றது. நெல் வளர்கின்ற காலத்தில் 18 பாகை - 20 பாகை வரையிலும் முற்றுகின்ற காலத்தில் 23பாகை - 26 பாகை வரையிலும் தேவை. மத்திய கோட்டுப்பகுதிகளில் பருவக்காற்று - ஆசிய நாடுகளில் உள்ளதனால் வருடம் முழுவதும் வெப்பநிலை உயர்வாக இருக்கின்றது.

பருவக்காற்று ஆசியப் பிரதேசங்களில் நீர்ப்பாசன வசதிகளை அமைக்கக்கூடிய அளவிற்கு தரைத்தோற்றமும் நீர்கொண்ட நதிகளும் இருக்கின்றன. அதனால், பெரும் அணைகளைக் கட்டி நீர்த்தேக்கங்களை அமைக்க முடிகின்றது. இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் நீர்ப்பாசனம் நன்கு அமைந்திருப்பதால், நெற்செய்கை சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

பருவக்காற்று ஆசியாவில் காணப்படும் மலிவான, ஏராளமான தொழிலாளர் நெற்செய்கைக்குச் சாதகமாகவுள்ளனர். விதைத்தல், நாற்று நடல், அறுவடை செய்தல் முதலான சகல வேலைகளுக்கும் மனித வலுவே அவசியமாகும். இந்தப் பிரதேசங்களில் மலிவான, தொகையான தொழிலாளர்கள் கிடைக்கின்றனர்.

எனவே தரைத்தோற்றம் - காலநிலை, தொழிலாளர் வசதி முதலான பல்வேறு ஏதுக்களும் பருவக்காற்று ஆசியாவின் நெற்செய்கைக்குக் காரணமாகவிருக்கின்றன.

செறிவான பயிர்ச்செய்கை -

பருவக்காற்று ஆசிய நாடுகளில் நெற்செய்கை செறிவான வாழ்க்கைப் பயிர்ச்செய்கையாகும். சிறிய விளைநிலங்களில் கூடுதலான விளைச்சலைப் பெறும். பயிர்ச்செய்கை செறிவான வாழ்க்கைப் பயிர்ச்செய்கையாகும். சீனா, இந்தியா, இலங்கை வங்களாதேஷ், பாகிஸ்தான், யப்பான், தாய்லாந்து, வியட்னாம் முதலான பருவக்காற்றுப் பிரதேசங்களில் செறிவான பயிர்ச்செய்கை முறைகள் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த நாடுகளில் 70 வீதம் மக்கள் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர். தெளிவான பயிர்ச்செய்கையில் பின்வரும் சிறப்பியல்புகளை அவதானிக்கலாம்.

இந்தப் பயிர்ச்செய்கைகளில் அடங்கும் விளைநிலங்கள் சிறியனவாகவும் காணப்படுகின்றன. சராசரி 2 ஏக்கர்களுக்குக் குறைவாகவே ஒரு குடும்பத்திற்கு விளைநிலங்கள் காணப்படுகின்றன. தனி மனிதனுக்கு இந்தியாவில் கிடைக்கக்கூடிய விளைநிலம் 0.3 ஏக்கராகும். இலங்கையில் 0.16 ஏக்கராகும். அடர்த்தியான குடித்தொகை, மூலதனமின்மை, உயர் வீதக் குத்தகை கடன் என்பனவற்றின் விளைவாக கீழைத்தேய விவசாயி அதிக விளைநிலத்தைச் சொந்தமாக வைத்திருக்க முடியாதவனாக இருக்கிறான். அத்துடன், அவன் குடும்பம் அதிகரிப்பதுபோல, அவனது விளைநிலம் அதிகரிப்பதில்லை. அதனால், அவனது சிறிய விளைநிலம் காலத்திற்கு காலம் சொத்தின்மையால் தூண்டப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு விவசாயிக்குரிய விளைநிலங்கள் ஒரே இடத்தில் தொடர்ச்சியாகக் காணப்படாமல், சிதறித் துண்டுதுண்டாகவும் காணப்படுகின்றது.

செறிவான பயிர்ச்செய்கையில் புராதன அருவிகளும் மனித வாழ்வும் கூடுதலாகக் பயன்படுத்தப்படுகின்றன. உழுதல், விதைத்தல், அறுவடை சூடடித்தல் முதலான சகல செய்கைகளுக்கும் கலப்பை மண்வெட்டி கைக்கருவிகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. மக்கள் தொகை அதிக அளவிலிருப்பதால், இது சாத்தியமாகின்றது. இயந்



திரங்களை உபயோகிப்பதற்குச் சிறிய விளைநிலங்கள் ஏற்றனவாக இல்லை. எனினும், அண்மைக்காலங்களில் உழவு இயந்திரங்களின் உபயோகம் அதிகரித்திருக்கின்றது. யப்பான் சிறிய விளைநிலங்களுக்கு ஏற்ற சிறிய உழவு இயந்திரங்களை உற்பத்திசெய்து பயன்படுத்தி வருகின்றது. ஏழைக் கமக்காரனால், நவீன இயந்திரங்களைப் பெறுவதற்குப் பணமில்லை. செறிவான பயிர்ச்செய்கையில் புராதன முறைகளாலும் அதிக விளைச்சல்களைத் தருகின்றது.

செறிவான பயிர்ச்செய்கையில் கைக்கொள்ளப்படும் ஒவ்வொரு முறையும், அதிக விளைச்சலைப் பெறும் நோக்குடன் கையாளப்படுகின்றன. நீர்ப்பாசன வசதிகள் நிறைந்த விடயங்களில், பல போகப் பயிர்ச்செய்கை, சூழல் முறைப் பயிர்செய்கை, கலப்புப் பயிர்ச்செய்கை என்பன கைக்கொள்ளப்படுகின்றன. இந்த முறைகள் கீழைத் தேயத்திற்கே உரிய சிறப்பான . முறைகளாகும். இந்தியா இலங்கை முதலான நாடுகளில் நெற்செய்கை பெரிதும் இருபோகமும், யப்பானில் மூன்று போகமும் செய்யப்பட்டு வருகின்றன. செறிவான பயிர்ச்செய்கை முறைகளினால் ஏக்கருக்குரிய விளைச்சல் 40 - 140 புசல்கள் வரையில் இருக்கின்றது. அமெரிக்க பிரேயறிஸ் கோதுமை வயல்களில் விளைச்சல் ஏக்கருக்கு 25-38 புசல்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

செறிவான வாழ்க்கைப் பயிர்ச்செய்கையில் நெல்லே பிரதான தானியப்பயிராகும். கோடிக்கணக்கான மக்களின் வாழ்வும் வளமும் வாழ்வின்மையும் இந்தப் பயிரின் விளைவையும், விளைவின்மையைப் பொருத்தேயமைகின்றது. நிலவுடமையற்ற, பயிர் செய்யும் வகுப்பினர் இந்த நாடுகளில் உள்ளனர். ஏக்கருக்குரிய விளைச்சல் அதிகமானாலும் சிறிய விளை நிலத்தில் பலர் தங்கியிருப்பதனால், தலைக்குரிய வருமானம் மிகக்குறைவாக இருக்கின்றது.

இவையே செறிவான வாழ்கைப் பயிர்ச்செய்கையாகும்.

# வறிய உலகுக்கும் செல்வந்த உலகுக்கும் போட்டியாகவுள்ளது பட்டினி...

'வறிய உலகம்', 'பட்டினி உலகம்' போன்ற பதங்களை நாம் குழப்பிக் கொண்டுள்ளோம். அத்துடன், ஒரு 'பட்டினி நாட்டில்' வாழும் அனைவரும் பசியை அகற்றி விடுவதில் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனரென்றும் நாம் எண்ணத் தொடங்குகின்றோம். மேலும், குறைவிருத்தி நாடொன்றின் அரசையும், அதிகாரிகளையும் பட்டினிப் பெரும்பான்மை யைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக நாம் நம்புகின்றோம். இதனால், ஏற்றுமதிகளுக்கான குறைந்த தீர்வைகள் அதிகரித்து, வெளிநாட்டு முதலீடு போன்ற சலுகைகள் இந்நாடுகளுக்கு வழங்கப்படும்போது, பட்டினி தானாகவே குறையும் என்றும் நாம் எண்ணுகிறோம். உண்மையில் மேட்டுக்குடியினரும், அவர்களது பங்காளிகளான பல்தேசிய நிறுவனத்தினரும் 'முன்னேற்றம்' அடைகின்றனர்.

குறைவிருத்தி நாடுகளில் பட்டினி கிடக்கும் மக்களும் சாதாரண அமெரிக்கர்களும், அவுஸ்திரேலியர்களும் பொது அபாயம் என்ற சங்கிலிக் கோர்வையால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளனர். அதாவது, மனிதனின் அத்தியாவசியத் தேவைகளுள் மிக முக்கியமான உணவுமீது உலகலாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் கட்டுப்பாடே இதுவாகும். நிலத்தினதும், உணவு உற்பத்தி மூல வளங்களினதும் கட்டுப்பாடு ஒரு சிலரின் கைகளில் இருப்பதே - குறைவிருத்தி நாடுகளில் பட்டினி



ஏற்படுவதற்கான பிரதான காரணம் என்பதை நாம் ஏற்கனவே சுட்டிக்காட்டினோம். அமெரிக்காவுக்கும் அவுஸ்ரேலியாவுக்கும் கூட இது பொருந்தும்.

எனவே, உணவில் 'பரஸ்பரம் தங்கியிருத்தல்' பல்தேசியத் தாபனங்களினதும் விபரீதக் கோட்பாடு - வறிய உலகுக்கு ஒரு சாபக்கேடாகவும், உணவு வளங்கள் சிறு தொகையினரின் கைகளில் குவிவதற்கான காரணமாகவும் இருந்து வருகின்றது.

## வாரம் ஒரு சிறுகைத்தொழில்

### கீரை அப்பம்

**தேவையான பொருட்கள் -**

பச்சையரிசி, - 2 கப், வேகவைத்த சாதம், அரை கப், தேங்காய் - 1, சீனி - 2 கரண்டி, உலர்ந்த ஈஸ்ட்- 1/2 தேக்கரண்டி, வேகவைத்து நன்கு மசித்த கீரை - 2 மேசைக்கரண்டி, உப்பு - தேவையான அளவு, எண்ணெய் - சிறிதளவு.

**செய்முறை -**

சுத்தம் செய்த பச்சை அரிசியை மூன்று மணிநேரம் ஊறவைத்து வடியுங்கள். தேங்காயைத்துருவி 2 கப் தண்ணீரை சேர்த்து பிழிந்து, தேங்காய்ப்பால் எடுங்கள். பச்சையரிசி, வேகவைத்த சாதம் சிறிதளவு தேங்காய்ப் பால்சேர்த்து கிறைண்டரில் அரைத்து எடுக்கவும். அதில் மீதமுள்ள தேங்காய்ப்பால், சீனி மற்றும் உப்பைச் சேருங்கள். மீதமாக இருக்கும் தண்ணீரோடு ஈஸ்ட் கலந்து அரைத்த மாவில் சேருங்கள். மாவை மூடி 3 மணிநேரம் அப்படியே வைத்திருந்து, பிறகு மசித்த கீரையைச் சேருங்கள் . இப்போது அப்பமாவு தயார்.

தாச்சி சூடானதும், மாவை விட்டு, தாச்சியின் பக்கங்களில் மாப்படும்படி ஒருமுறை சுற்றி ஊற்றுங்கள். 1 நிமிடம் மூடிவையுங்கள். நடுப்பகுதி மிருதுவான ஓரம் முறுகியதும் - அப்பம் தயார்.

# குளிர்பான வியாபாரம்

அதிக சிரமமோ, பெரிய மூலதனமோ இல்லாமல், யாரும் எளிதாகச் செய்யக்கூடிய தொழில் குளிர்பானக் கடை நடத்துதல். கோடை நாட்களில் வெயில் கடுமையாக இருக்கும் நேரத்தில், குளிர்பான கடைகள் ஒரு நல்ல வியாபாரமாக இருப்பதுடன், ஒரு பொதுநல சேவையாகக்கூட இருக்கும் என்று கூறலாம்.

குளிர்பான கடையை மிகவும் சாதாரண ஒரு சிறிய தொழிலாகவும் செய்யலாம். பெரிய வியாபாரமாகவும் செய்யலாம்.

சிறியளவில் செய்வதானால் - ஒரு 1000 ரூபா மூலதனம் இருந்தால்கூடப் போதுமானது. இந்த வியாபாரத்திற்கு ஒரு கடையை வாடகைக்கு எடுக்கவேண்டுமென்ற அவசியமும் இல்லை. சாதாரணமாகப் பழைய ஜாதிக்காய் மரத்திலான ஒரு மேசை இருந்தால் கூட, போதுமானதாகும்.

இந்த மேசையை சனப்புழக்கம் அதிகமாக இருக்கும் இடங்களில், சாலையோரமாக ஒரு மரத்தின் நிழலில் அல்லது கட்டிடத்தின் நிழலில் போட்டுக்கொண்டால் கடை தொடங்குவதற்கான இடமாக அது அமைந்துவிடும்.

தண்ணீர் வைத்துக்கொள்ள பெரிய மண் பானை, சர்பத் விநியோகிக்க நாலைந்து கண்ணாடி டம்ளர்கள், இவைதான் முக்கியமான சாதனங்கள். எலுமிச்சம் பழங்களை கொஞ்சம் மலிவாகப் பார்த்து வாங்கிக்கொள்ள வேண்டும்.

நடுத்தரமான அளவுள்ள கரண்டியில் இரண்டு கரண்டி சர்பத் கண்ணாடி டம்ளரில் ஊற்றி, எலுமிச்சம் பழத்தில் பாதியை பிழிந்துவிட்டு, தண்ணீரை கண்ணாடி டம்ளரில் ஊற்றி நிரப்பி விட்டால், சர்பத் பானம் தயார். தேவைப்படுவோருக்கு 'ஐஸ்' தூள் சேர்த்துக்கொடுக்கலாம்.

பாதிக்குப் பாதி லாபம் தரக்கூடிய தொழில் இது. ஒரு நாளைக்கு இருபது ரூபாய்க்கு வியாபாரம் நடைபெற்றால், நிச்சயமாக ஏழெட்டு ரூபாய்க்கு மேல் லாபம் கிடைக்கும். இந்த மாதிரி எளிய சர்பத் கடைகளை வைப்பதற்கான இடத்தைத் தேர்ந்தெடுப்பதில்தான் அதிக அக்கறைசெலுத்தவேண்டும்.

குறிப்பாக தக்காளி, ஒரேஞ்சு, திராட்சை, மாம்பழம் அன்னாசிப்பழம், சாத்துக்குடி போன்ற பழவகைகளின் சாற்றை மக்கள் விரும்பிச் சாப்பிடுவார்கள். பழச்சாற்றை வாடிக்கையாளர்களுக்குத் தரும்போது ஒரு தேக்கரண்டி அளவுக்கு ரோஸ் சர்பத்தைக் கலந்துகொடுத்தால் பானத்தின் நிறமும், ருசியும் மிகவும் சிறப்பாக இருக்கும்.

இந்தமாதிரி குளிர்பானக் கடைக்குச் சற்று அதிக மூலதனம் தேவைப்படும் என்றாலும், அந்த மூலதனச்செலவை மிகவும் குறைந்த காலத்திலேயே சம்பாதித்து விடும் அளவுக்கு வியாபாரமும் நன்றாக இருக்கும். இந்த வியாபாரத்தில் லாபம் ஒரு கணிசமாக இருப்பது ஒரு சிறப்பாகும். இந்தக் காரணத்தால் இந்தத் தொழில் செய்வதற்கு துணிந்து கடன் வாங்கவும் செய்யலாம்.

நமக்கு மிகவும் அறிமுகமான நண்பர் ஒருவரின் பழரசக் கடையில் ஒரு நாளைக்கு மிகவும் சுலபமாக முந்நூறு நானூறு ரூபாய்க்கு வியாபாரம் நடப்பதைக் கண்டிருக்கிறோம்.

மூலதனச் செலவே இல்லாத குளிர்பான வியாபாரத்தில் குளிர்மோர் விற்பனை செய்வதும் ஒன்றாகும். வீட்டிலேயே தயிர் தயாரித்து வைத்துக்கொண்டு, கேட்பவர்களுக்கு ஐஸ் போட்டுக்கொடுக்கலாம். கோடைக்காலத்தில் மோர் விற்பனை மிகவும் சிறப்பாக இருக்கும்.

பூ.ம.செல்லத்துரை

# கிழக்கின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் அவசியம் பாதுகாக்கப்படவேண்டும்

கிழக்கிலங்கை ஈழத்தமிழர்களின் முதுசம் என்று சொல்லக்கூடிய பழம்பெரும் தாயகம். தன்னிகரில்லாத் தமிழகம் - அஞ்சாநெஞ்சன் சிவநெறி தவநெறிமிக்க இசைவேந்தன் இராவணன் ஆண்ட மண். இந்த மண் அன்று 14 ஆம் நூற்றாண்டுக்கு முன் தனித்தமிழகமாகத் தரணிக்கு அறிமுகமான பிரதேசம். மாற்றார் வருகையால் வேற்றார் [illegible] இஸ்லாமியரும் இணைந்துவாழ்ந்த பகுதியாக உயர்ந்து பெருமை கொண்டது. 1948 ஆம் ஆண்டின் பின் சுதந்திர இலங்கையில் சிங்கள ஆட்சியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் - ஓரினம் ஈரினமாகி, மூன்றினமாகி முதலையே பறிகொடுத்து ஏங்கும் பரிதாப நிலையில் விழிக்கும் வீரம் விளைநிலம் சுதந்திரம் கிழக்கிலங்கைக்குத் தந்த அந்திரம் இது.

கிழக்கிலங்கையில் மொத்த சனத்தொகையில் - சரி அரைவாசிப் பேர் தமிழர். அதாவது நாலேகால் இலட்சம் தமிழர்களும் இரண்டரை இலட்சம் சிங்களவரும் இரண்டேகால் லட்சம் இஸ்லாமியரும் இருந்தும் - கிழக்கை, சிங்கள அரசு இஸ்லாமியருக்குச் சீதனமாக்கிப் பெரும்பான்மை தமிழரைச் சிறுபான்மைக்கு அடிமையாக்கி வரலாற்றைத் திரிவுபடுத்துகிறது. இதனால், தமிழர்களின் நிலங்கள் திட்டமிட்ட முஸ்லிம் குடியேற்றங்களால் அபகரிக்கப்படுகின்ற இந்த அவலம் - கற்குடா, அம்பாறை, திருமலையில் அரங்கேறி அம்பலத்துக்கு வந்துவிட்டன.

இவ்வாறான பயங்கர இன அழிப்பில் இருந்து, கிழக்கில் தமிழினம் பாதுகாக்கப்படவேண்டுமெனால், தமிழினம் கிழக்கில் தன் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கவேண்டும். அதற்குள்ள ஒரேவழி தமிழர் அனைவரும் ஒரே குடையின்கீழ் ஒன்று திரள வேண்டும். வேற்றுமை களைந்து ஒன்றுபட்டு ஒருமனதோடு தமிழர் கூட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டும்.

ஜனநாயகமும் சுதந்திரமும் எல்லோருக்கும் சொந்தமானதுதான், சமனானதுதான், அதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை. இந்தநிலை - ஒரே இனமும் ஒரே மொழியுமுள்ள நாட்டுக்கும் ஏட்டுக்கும் பொருந்தும். ஆனால், பல்லினம் வாழும் நாட்டுக்குப் பொருந்துமா என்றால்... பொருந்தாது என்பதுதான் நாம் ஐம்பது ஆண்டுகளாகக் கண்ட அனுபவ அறிவாகும்.

பட்டுப்பட்டுப் பெற்ற இந்த அனுபவ அறிவைப் பயன்படுத்தவேண்டிய நேரமிது, காலமிது. எனவே, தமிழர்கள் - வரட்டுத்தனமாக, எனது சுதந்திரத்தை நான் நினைத்த விதத்திற்தான் செய்வேன். அது என் சுதந்திரம். இதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை என வரட்டுக்கௌரவம் கொண்டால், அதனால் பாதிக்கப்படுவது அந்தத் தனி மனிதன் மட்டுமல்ல, ஒட்டுமொத்தத் தமிழினமுமாகும்.

இது ஒரு குடம் பாலுக்கு ஒரு சொட்டு விஷம் போலாகும். இவ்வாறான வரட்டுக் கௌரவம் கொண்ட தனிமனித முடிவுகளாற்தான், தமிழினம் தன்னிலை இழந்து தலை குனிந்து இன்று கூனிக்குறுகி நிற்கிறது. 1924 ஆம் ஆண்டு இலங்கையில் உருவாக்கப்பட்ட 'மானிங்' அரசியற்திட்டத்தின்படி - சிறுபான்மை இனத்தின் பிரதிநிதிகள் 17 பேரையும், பெரும்பான்மை இனத்தின் பிரதிநிதிகள் 16 பேரையும்கொண்ட சட்ட நிருபண சபையை பிரித்தானியர் உருவாக்கினார்கள். அதன்மூலம் இலங்கையின் அதிகாரம் சிறுபான்மையோர் கைக்கு வந்தது.

பெரும்பான்மைச் சிங்களவர் கொதித்தெழுந்தார்கள். அவர்களின் எதிர்பார்ப்பை - கிளர்ச்சியை - பிரித்தானியர் அலட்சியம் செய்தார்கள். வேறுவழி தெரியாத சிங்களத் தலைவர்கள் இதற்கு ஒரேவழி - சிறந்த திறந்தபாதை, சிறுபான்மையோர் வாழும் வடக்கு - கிழக்கை சிறுபான்மையோர் ஆள வசதி செய்துவிட்டால், மற்றப்பகுதிகளை தாங்கள் ஆள வசதியும் வாய்ப்பும் ஏற்படும் என நினைத்தே, அன்று இலங்கையை மூன்று அரசியல் அலகுகளாகப் பிரித்து ஒரு மத்திய அரசின் கீழ் வட - கிழக்கைத் தமிழருக்கும், மேற்கையும் தெற்கையும் இணைத்து கரையோரச் சிங்களவருக்கும், மத்தியையும் அதை அண்டிய பகுதிகளையும் இணைத்துக் கண்டிச் சிங்களவருக்குமாக ஒரு இணைப்பாட்சித் திட்டத்தை ஏற்படுத்த கண்டிச் சிங்கள மகா சபை முடிவுசெய்து, அதை டொனமூர் அரசியார் சீர்திருத்தசபையில் முன்மொழிந்தது. அதை ஏற்குமாறு அன்றையத் தமிழ் தலைவர்களைக் கெஞ்சினார்கள். ஆனால், தமிழ்த் தலைவர்களின் சாணக்கியக்குறையும் தூரப் பார்வை இன்மையும் வரட்டுக் கௌரவமும் மிஞ்சியதால் - கெடுத்தார்கள்.

டொனமூர் 1931 ஆம் ஆண்டு சர்வஜன வாக்குரிமையைச் சிபார்சு செய்தார். அதனால் சிங்களவர் சிரித்தார்கள். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல அவர்களின் அரசியல் கோரிக்கை நிறைவுசெய்யப்பட்டது.

டொனமூர் திட்டத்தை அமுலாக்க அன்றைய சட்டநிருபணசபை அதை நிறைவு செய்யவேண்டும். ஆனால், சட்டநிருபண சபையில் அதைத் தோற்கடிக்கும் அளவுக்குப் பெரும்பான்மை - சிறுபான்மையினரிடம் இருந்தும், வரட்டுக் கௌரவமிக்க இரு சிறுபான்மைப் பிரதிநிதிகள் செய்த மாபெரும் துரோகத்தால், அந்த டொனமூர்த் திட்டம் நிறைவு செய்யப்பட்டது. அதனூடாக 1936 ஆம் ஆண்டு தனிச்சிங்கள மந்திரிசபை உருவாகியது. இரண்டு தனிமனித துரோகிகள் - தன்னலத்தைத் தேடிச்செய்த துரோகத்தால், ஒட்டுமொத்தமாகத் தமிழினம் பாதிக்கப்பட்டது.

அதுமட்டுமா - டொனமூர் அரசியற் திட்டத்தில்தான் பிழைவிட்டு விட்டார்கள் என்றால், மீண்டும் சோல்பரி அரசியற் திட்டத்தைத் தமிழர்கள் எதிர்த்து வாதாடிக்கொண்டிருக்க, அதையும் சுய இச்சைகள் தங்களுக்குக் கிடைத்த பச்சையை ஏற்று ஆதரித்ததால், மீண்டும் - தமிழர் அரசியல் வாழ்வு அம்போவானது.

எனவே, தமிழினத்தின் இன்றையநிலைக்கு நிரக்கதிக்கு - இச்சைகொண்ட தனி மனிதக் கோடரிக்காம்புகளே காரணம். பட்டுப்பட்டுக் குட்டு வாங்கியதுபோதும். இனிமேலாவது தன்னிலை உணர்ந்து, தலை நிமிர்ந்து, நாம் தமிழர் என்ற உணர்வோடு நமக்கான பிரதிநிதிகளைத் தப்பாது தவறாது - நாம் தெரிந்தெடுக்கவேண்டும். தவறு செய்பவர்களைத் தட்டிக்கேட்கவும், இனித் தவறே நடவாமல் பாதுகாக்கவும், தமிழர்களின் தலையை நிமிரத்திய தலைமைகள் - தரணிபோற்றும் தளபதி- தன்னலம் துறந்து தமிழினத்திற்காக வாழும் வரலாற்றுப் புருஷன்- தமிழர் தேசியத் தலைவனும் - அவர் வழிகாட்டலில் 18000 மாவீரர்களைப் போர்க்களத் தியாக வேள்வியில் தியாகச் சுடராக்கி, உலக சமூகத்தில் நமக்கோர் நிலையை, நினைப்பை ஏற்படுத்திய நிமிர்த்திய தமிழீழ விடுதலைப்புலிகளும் விழிப்பாயிருக்கிறார்கள்.

அவர்கள் மேற்பார்வையில், அவர்கள் காட்டும் தமிழர் கூட்டமைப்பை ஒரே அணியாக வெற்றிபெறவைப்பதே - தமிழினம், தமிழீழ விடுதலைப் புலிகள் எமக்குச்செய்த ஈடு இணையில்லாத தியாகத்துக்கும் காட்டிய வீரத்திற்கும் கைமாறாகும்.

கிழக்கிலங்கையைப் பொறுத்தமட்டில் - மட்டக்களப்பில் நான்கு பேரையும் அம்பாறையில் இருவரையும் திருமலையில் இருவரையும் பிரதிநிதிகளாகத் தமிழர் பெறவேண்டும். இது தமிழர்களின் பிரதிநிதித்துவ உரிமை. இதுகாலவரை இதைப்பெறமுடியாதநிலை நாட்டிலிருந்தது. தற்சமயம் பெறும் நிலை இருந்தும் பெறாவிட்டால் - அதுதற்கொலைக்கு ஒப்பான செயலாகும்.

தமிழர்களின் வாக்களிப்பு சென்ற தேர்தலில் இடம்பெற்றதுபோல் ஏற்படாமல், சகல வாக்காளரும் வாக்களிக்க வசதிசெய்து கொடுக்கவேண்டிய பொறுப்பு - அரசிக்கிருந்தாலும் - அதைத் தவறவிடாது செய்ய வேண்டிய முக்கிய கடமையும் உரிமையும் விடுதலைப் புலிகளுக்குண்டு.

போராட்டத்திற்கு ஆட்பலமும் ஆயுதபலமும் வேண்டுவதுபோல, அரசியல் பேச்சுவார்த்தைக்கு நாடாளுமன்ற பிரதிநிதித்துவபலம் அவசியம் வேண்டும். இந்தப் பலத்தை உருவாக்கும் அருமையும் பெருமையுமான சந்தர்ப்பம் இது. எனவே, வெண்ணெயைத் திரள வைத்து நெய்யைப்பெறக் கண்ணில் எண்ணைய் ஊற்றி விழிப்பாக இருக்க வேண்டிய பொறுப்பு - புலிகள் கடமையாகும். எனவே, கிழக்கின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை புலிகள் பாதுகாக்க முன்வரவேண்டும். ☆

> **ஜனநாயகமும் சுதந்திரமும் எல்லோருக் கும் சொந்தமானது தான். சமனானதுதான். அதில் தலையிட யாருக்கும் உரிமையில்லை. இந்தநிலை ஒரே இனமும் ஒரே மொழியுமுள்ள நாட்டுக்கும் ஏட்டுக்கும் பொருந்தும்.**
> **ஆனால், பல்லினம் வாழும் நாட்டுக்குப் பொருந துமா என்றால் பொருந்தாது என்பதுதான் நாம் ஐம்பது ஆண்டு களாகக் கண்ட அனுபவ அறிவாகும்.**

---

### யாழ். குடாநாட்டில்

# காணாமற் போனவர்கள் குறித்து முழுமையான விசாரணையில்லை

## ஐ.நா. மனிதவுரிமை அமைப்பை தலையிட அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அன்னையர் முன்னணி மற்றும் படையினரால் கைதாகிக் காணாமற் போனவர்களின் பெற்றோர் பாதுகாவலர்கள் சங்கம் முதலியன இணைந்து - ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர்ஸ்தானிகர் பலாய்ஸ் வில்சனுக்குக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

கடந்த இருதினங்களாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகம்முன் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இவர்கள், தமது போராட்டத்திற்குச் சரியான தீர்வெதுவும் கிடைக்காத நிலையில் இந்தக் கடிதத்தினை அவருக்கு அனுப்பியுள்ளனர்.

ஜெனீவாவில் அமைந்திருக்கும் ஐ.நாவின் தலைமைச் செயலகத்தில் உள்ள மனித உரிமைகளுக்கான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -



மனித உரிமை ஆணைக்குழு அலுவலகம் முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் அன்னையர் முன்னணியினர்

1996 ஆம் ஆண்டு முதல் யாழ். மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன இளைஞர், யுவதிகள் பற்றிய முழுமையான விசாரணைகள் இடம்பெறவில்லை.

இந்த விடயம் குறித்து நாம் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டும் இது தொடர்பாகத் தொடர் போராட்டங்களை நடத்தியும் எமக்கு இதுவரை சரியான எந்தப் பதிலும் கிடைக்கவில்லை.

அவர்கள் - தம்மால் அறிக்கைகளை மட்டுமே தயாரிக்கமுடியும். வேறெந்த நடவடிக்கைகளையும் எடுக்கமுடியதெனக் கைவிரித்துவிட்டார்கள். அப்படியானால் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கென ஒரு குழு தேவைதானா என எண்ணத் தோன்றுகின்றது.

தாங்கள் இலங்கைக்கு வந்திருந்தபோது - கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு விஜயம் செய்துவிட்டு யாழ்ப்பாணம் வராமலே திரும்பிவிட்டீர்கள். இது எமக்கு மிக ஏமாற்றத்தை அளித்துள்ளது.

நீங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வந்து எமது பிரச்சினைக்குச் சரியானதும் நீதியானதுமான விசாரணையை மேற்கொள்வதுடன், எவரது ஆதரவுமற்று அநாதைகளாக நிற்கும் எமது சங்கத்தின் கஷ்டங்களைப் புரிந்துகொண்டு, எமது பிள்ளைகள் பற்றிய முடிவைத் தெரிவிப்பதோடு எதிர்காலத்தில் எமது பிள்ளைகள் காணாமற்போக வழி ஏற்படாதிருக்குவும் வழிசெய்யவேண்டும் என வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)

---

# அமைச்சைப் பொறுப்பேற்காதுவிட்டிருந்தால் திருமலைத் துறைமுகம் தகர்க்கப்பட்டிருக்கும்

## ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சைத் தான் பொறுப்பெடுக்காமல் விட்டிருந்தால் விடுதலைப் புலிகளால் திருகோணமலைத் துறைமுகம் நிச்சயமாக தாககப்பட்டிருக்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

அனுராதபுரத்தில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சமாதான ஒப்பந்தத்தை முறிக்கும் வகையில் குண்டுத் தாக்குதலில்ஈடுபடுமாறும், ஏ-9 நெடுஞ்சாலையை மூடிவிடுமாறும் ஐக்கிய தேசியக் கட்சி விடுதலைப் புலிகளைக் கேட்டுக்கொண்ட போதும், எதுவும் பலிக்காது, சிறப்பான முறையில் சமாதான ஒப்பந்தம் நடைமுறையிலிருப்பதாகவும் ஜனாதிபதி தனதுரையில்தெரிவித்தார்.

அத்துடன், திருகோணமலைத் துறைமுகம் தாக்குதலுக்குள்ளாகும் அச்சம் இருந்து வந்ததாகவும், ரணில விக்கிரமசிங்கவின் சமாதான செயற்பாடுகளால் இலங்கை சில நன்மைகளைப் பெற்றுள்ள போதும் சமாதானத்தை நிலைநாட்டுவது தொடர்பில் பெரிதளவில் எதுவும்சாதிக்கப்படவில்லை எனவும் தனதுரையில் குறிப்பிட்ட ஜனாதிபதி, விடுதலைப் புலிகள் தமது படைப்பலத்தை பெருமளவில் கட்டியெழுப்பியுள்ளதாகவும் தெரிவித்தார்.

தனது நாட்டுப் படையினரை ரணில் விக்கிரமசிங்க காட்டிக் கொடுத்ததன் காரணமாக, விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிறப்பாக செயற்பட்டு வந்த 40 உளவுத் துறையினர் உயிரிழக்க நேர்ந்ததாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

---

# அஞ்சல் அறிமுக அட்டையைப்பெற 14 நாட்களுக்குமுன் விண்ணப்பிக்கவும்

## பிராந்திய நிர்வாக அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அஞ்சல் அறிமுக அட்டைகளை பெறுவதற்காக விண்ணப்பிக்கும் மாணவர்கள், தேவைப்படும் தினத்தில் இருந்து 14 நாட்களுக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு பிராந்திய நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

அண்மைக்காலமாக அஞ்சல் அறிமுக அட்டையை பெறுவதற்காக அதிகளவான மாணவர்கள் விண்ணப்பித்து வருகிறார்கள்.

இவ்வாறு விண்ணப்பிக்கும் விண்ணப்பத்தாரிகள் சில தினங்களிலே தமது அஞ்சல் அட்டைகளை பெறுவதற்காக நிர்வாக அதிகாரி அலுவலகத்திற்கு அலைந்து திரிகிறார்கள்.

இடநெருக்கடிகள் மற்றும் ஆட்பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் குறிப்பிட்ட சில ஊழியர்கள் மட்டும், விண்ணப்பங்களை பரிசீலித்து அனுப்பிவைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இதனால் மாணவர்கள் தங்களுடைய அஞ்சல் அறிமுக அட்டைகளைப் பெறுவதற்கு, உரிய நேரத்தில் பெறுவதற்கு வசதியாக 14 நாட்களுக்கு முன்னர், விண்ணப்பங்களை அருகிலுள்ள அஞ்சல், உப அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக பிராந்திய நிர்வாக அதிகாரி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு நிர்வாக அதிகாரி எஸ்.சிவராஜசிங்கம் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*ஏதம் பெருஞ்செல்வம் தான்தூவான் தக்கார்க்குஒன்று
ஈதல் இயல்பில்லா தான்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழ்மக்களின் வாக்களிக்கும் உரிமையும் ஜனநாயக உரிமையை மறுக்கும் இலங்கையும்

வடக்கு - கிழக்கின் இராணுவக் கட்டுப்பாடு இல்லாத பகுதிகளில் தேர்தல் நடத்துவதற்கான சகல சாத்தியக் கூறுகளையும், இலங்கையின் சர்வாதிகாரி ஜனாதிபதி முழுமையாக நிராகரிப்பவராகவுள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் அதிக கால சமாதான சூழ்நிலையில் தமது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மக்கள் - தமிழ் மக்கள் இந்தத் தேர்தலில் தமது வாக்களிக்கும் உரிமையை, சுயாதீனமாக பயன்படுத்த ஆர்வம் கொண்டிருக்கையில் அவர்களின் ஜனநாயக ரீதியிலான வாக்களிக்கும் மனித உரிமையை, தனது அரசியல் சுயநலத்திற்காக, நியாயமற்றதும், உண்மையற்றதுமான காரணங்களை முன்வைத்து நிராகரிக்க முனைவது அப்பட்டமான அரசியல், அநாகரிக அயோக்கியத்தனமேயாகும்.

சர்வஜன வாக்கெடுப்பு என்ற சொல்லின் அர்த்தம் பௌத்த சிங்கள பேரினவாத சிந்தனையாளர்களுக்கு வரவரப் புரிவதாக இல்லை. அதுமட்டுமல்ல வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை அவர்கள் தமது சுய அரசியல் அபிலாஷைகளுக்காக சாதகமான முறையில் பயன்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றனர் என்பது வெளிப்படையாகியுள்ளது.

வடக்கு - கிழக்கின் தமிழ் மக்கள் தமது வாக்குகளை சுதந்திரமாகவும், அழுத்தங்களுக்குள்ளாகாத வகையிலும், முழுமையாக அளிக்க இந்தத் தேர்தலை பயன்படுத்த விரும்புகின்றனர். அது மட்டுமல்ல, அதன் மூலம் உண்மையான தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வின் ஒட்டுமொத்த வலிமையையும் சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்தவும் விரும்புகின்றனர் என்பதே இன்று பேரினவாத சிங்கள தலைமைகளுக்கும், அமைப்புகளுக்கும், அவர்களின் அடி தொடரும் ஏனைய சுயநல அரசியல் கட்சிகளுக்கும் வயிற்றில் புளி கரைக்கும் விடயமாகும்.

இதனாலேயே, இந்தத் தேர்தலில் அவர்கள் ஒருமித்த குரலில் - தமது ஏகோபித்த ஆதரவை தாம் கௌரவமாக தலைமை நிமிர்ந்து கம்பீரமாக இன்று வாழவைத்துள்ள, விலை மதிப்பிடமுடியாத தியாக அர்ப்பணிப்புகளால் உலக சமூகத்தை திரும்பிப் பார்த்து வியக்கவும், மதிக்கவும் வைத்துள்ள, விடுதலைப் புலிகளின் ஆதரவைப் பெற்ற தமிழ்க் கூட்டமைப்புக்கு அளிக்க முனைந்துநிற்கும் இந்தச் சமயத்தில், தமிழ் மக்களின் இந்த முடிவு விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்ற கருத்து நிலைப்பாட்டை சந்தேகத்திற்கிடமின்றி உறுதிசெய்துவிடும் என்ற அச்சமே, இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் வாக்குகளை அளிக்க விடாது சிங்களத் தலைமைகள் தடுக்க முனைவதற்கு ஒரே ஒரு காரணம் என்பதில் இருவேறு கருத்துக்கு இடமில்லை.

இந்தத் தேர்தலை நேர்மையாகவும், கண்ணியமாகவும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மதிக்கும் வகையிலும் நடத்தும் தார்மீக சிந்தனை ஜனாதிபதிக்கும் அவர் தலைமையிலான கூட்டணி அமைப்புகளுக்கும் அவரை ஆதரிக்கும் ஏனைய சக்திகளுக்கும், குழுக்களுக்கும் கிடையவே கிடையாது என்பதை அவர்களின் அறிக்கைகளும், பிரசாரப் பிரசுரங்களும் வெளிப்படையாகவே தெரிவித்துள்ளன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் வாழும் தமிழ்மக்களின் வாக்களிக்கும் உரிமையை ஜனாதிபதி அவரின் கட்டுப்பாட்டில் உள்ள படைத்தரப்பினர், அவரை ஆதரிக்கும் இனவாதிகள், தமிழின விரோத சக்திகள் அனைத்துத் தரப்பினரும் தடுப்பதில் முனைப்பாக உள்ளதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ளவேண்டிய கட்டம் இதுதான்.

- விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரசேதத்தில் தேர்தலை நடத்தமுடியாது என்று சர்வாதிகாரத் தொனியில் கூறும் ஜனாதிபதி

- டக்ளஸ் தேவானந்தாவும், ஆனந்தசங்கரியும் சம்மதித்தால் நடத்தலாம் என்று கூறும் ஜே.வி.பி.

- இதுகுறித்து வாய்பொத்தி நியாயத்தைக் கூறமறுக்கும் ரணில் விக்கிரமசிங்க.

இவையனைத்தையும் பார்த்தும், மௌனம் சாதிக்கும் சர்வதேச ஜனநாயகப் பராம்பரியம்.

அனைத்தும் தமிழ்மக்களின் உரிமைகளை மறுக்கும் - ஜனநாயக விரோத சக்திகளாகச் செயற்படுகின்றன என்பதில் ஐயமில்லை.

வாக்களிக்கும் தமது உரிமையை பயன்படுத்தவும், தமிழ் மக்களை சோதனையிட்டபின்னரே அனுமதிக்கமுடியும் எனக் கூறும் இராணுவத்தரப்பை சர்வதேசம் ஜனநாயகத்தின் காவலர்கள் எனப் பாராட்டிக் கௌரவிக்கப்போகிறதா?

சமாதானத்தைப்பற்றி வாய்கிழியப் பேசும் ரணில், சந்திரிகாவின் மேற்குறித்த கருத்துக்கு என்ன சொல்லப்போகிறார்.

டக்ளஸ் தேவானந்தாவும், சங்கரியாருந்தான் தமிழ் மக்களின் வாக்களிக்கும் உரிமையை தடுப்பதான தொனியில் ஜே.வி.பி கூறுவதை ஒப்புக்கொள்ளுமாப்போன்று மௌன சம்மதம் அளிக்கப்போகின்றார்களா?

பாதுகாப்பின்மை எனக் காரணம் கூறியும், சோதனை செய்தே அனுமதிப்போம் என அவமதித்தும், தமிழ் மக்கள் தமது வாக்குரிமையை பயன்படுத்தும் உரிமையை எவர் கூறினாலும், அதனை எவர் அங்கீகரித்தாலும், அவர்கள்தான் சமாதான விரோதிகள் - ஜனநாயக விரோதிகள் - பேரினவாதப் பயங்கரவாதிகள் என வரலாறு பதிவுசெய்துகொள்ளும்.

சமாதானத்தை வலியுறுத்தும் சர்வதேச சமூகம் - தமிழ் மக்களின் ஜனநாயக உரிமையை இலங்கை அரசிற்கு வலியுறுத்தாது, வரலாற்றுத் தவறைச் செய்யாது என நம்புவோம்.

## நாடும் நடப்பும்




செய்தி - இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு வாக்களிக்க அரசாங்கம் தடை

# வன்முறைகளை தூண்டிவிட ஐக்கிய தேசியக் கட்சி திட்டம்

## தேர்தல் ஆணையாளருக்கு ஜே.வி.பி. கடிதம்

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலின்போது வன்செயல்களைத் தூண்டிவிடுவதற்குப் படைகளிலிருந்து தப்பியோடியோரையும், பாதாள உலகக் குழுவினரையும் ஐக்கிய தேசியக்கட்சி பயன்படுத்தவுள்ளதாக ஜே.வி.பி - தேர்தல் ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது தேவையற்ற விதத்தில் பொய்ப்பிரசாரத்தை மேற்கொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி ஏற்கனவே திட்டம் தீட்டியுள்ளது.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவான பொலிஸாருக்கு லஞ்சம் வழங்கி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்கள்மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக் கைதுசெய்ய வைப்பது போன்ற முயற்சியிலும் ஐக்கிய தேசியக்கட்சி ஈடுபட தீர்மானித்துள்ளது. தேர்தலுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் வன்செயல்களில் ஈடுபட்டுவிட்டு, அதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது சுமத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடாளுமன்ற தேர்தலில் பிக்குகள் போட்டியிடுவதனால், அவர்களது விகாரைகளைத் தாக்கிவிட்டு, அதனை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மீது பழிசுமத்தவும் திட்டமிட்டுள்ளது.

அத்துடன், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு ஆதரவான தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கருகில் வன்முறைகளைத் தூண்டிவிட்டு, வாக்களிப்பைக் குறைக்கவும் ஐக்கிய தேசியக்கட்சி முயற்சிசெய்கிறது.

இவ்வாறான செயற்பாடுகளை கட்டுப்படுத்த பொலிஸாருக்குக் கட்டளையிடுவதற்கு 17 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின்படி, தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் உள்ளது.

எனவே, தேர்தல் ஆணையாளர் இவற்றைத் செயற்படுத்த வேண்டுமென அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புலிகளின் பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைக்க முடியாமைக்கு பிரதமரே காரணம்!

## குற்றம் சுமத்துகிறார் விமல் வீரவன்ச

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்குச்சாவடிகள் அமைக்கமுடியாதுள்ள நிலைமைக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமே காரணம் என விமல் வீரவன்ச குற்றம் சாட்டினார்.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் முன்னணியின் செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்தபோதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம்-புலிகள் இயக்கத்துடன் தூரநோக்கற்றமுறையில்தான் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்துள்ளது.

அதற்கு நல்ல எடுத்துக்காட்டு - புலிகள் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையாகும். இதனால், அந்தப் பகுதி மக்கள்தான் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கப் போகின்றார்கள்.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும்போது, பிரதமர் ரணில் எதிர்காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படும் என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை.

தேர்தல் சட்டப்படி - இராணுவத்தினரும் பொலிஸாரும் சுதந்திரமாகக் கடமையில் ஈடுபடக்கூடிய பகுதிகளில்தான் வாக்குசசாவடிகளை அமைக்கமுடியும்.

ஆனால், பிரதமர் ரணில் தலைமையிலான அரசாங்கம் செய்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கைப்படி - இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் இராணுவத்தினரும், பொலிஸாரும் தங்களது சீருடையில் கடமையாற்றமுடியாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியான நிலையில் எப்படி வாக்குச் சாவடிகளை அமைக்கமுடியும்.

நாட்டு மக்களைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு யுத்தத்தை விடவும், ஜீவனோபாய யுத்தமே பிரதான இடத்தைப் பெற்றிருக்கிறது என்று விமல் வீரவன்ச கூறினார்.

## அரசியற்கட்சி செயலாளர்களுடன் தேர்தல் ஆணையாளர் சந்திப்பு!

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில் போட்டியிடவுள்ள அரசியற்கட்சிகளின் செயலாளர்களை - தேர்தல் ஆணையாளர் நாளை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

தேர்தல் காலத்தில் மேற்கொள்ளவுள்ள கடமைகள் குறித்து ஆராய்வதற்காக இந்தக் கூட்டத்திற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர்.

வேட்புமனுத்தாக்கல் முடிவடைந்த பின்னர், அரசியற்கட்சியின் செயலாளர்களை தேர்தல் ஆணையாளர் சந்திக்கவுள்ளமை இதுதான் முதற்தடவையாகும்.

இந்தச் சந்திப்பில் தேர்தல் வாக்களிப்பை சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்த அரசியற்கட்சித் தலைவர்கள் தமது ஒத்துழைப்பை தேர்தல் ஆணையாளருக்கு வழங்குவார்களெனத் தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## தேர்தல் கையேடு ஐக்கிய முன்னணி வெளியிட்டது

(கொழும்பு)

தமது கட்சி சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களின் விபரத்தைக் கொண்ட கையேடு ஒன்றை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெளியிட்டுள்ளது.

இந்தக் கையேட்டில் வன்முறைகளற்ற வகையில் தேர்தல் பிரசாரங்களை நடத்துவதற்கான வழிகாட்டு நெறிகளும் அச்சிடப்பட்டுள்ளன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் கண்காணிப்பு பிரிவினால் வெளியிடப்பட்டிருக்கும் இந்தப் பிரசுரத்தில்-

பொது இடங்களில் சுவரொட்டிகளை ஒட்டுவதைத் தவிர்க்குமாறும், பொதுச் சொத்துக்களை பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் வேட்பளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

# தடைப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகளை முன்னெடுத்து செல்லுமாறு சுவிஸ் வலியுறுத்து!

## அந்நாட்டு பத்திரிகை தகவல்

இலங்கையில் இரண்டுவருட காலமாகத் தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சியை மீளவும் முன்னெடுத்துச் செல்லுமாறு, சுவிற்சர்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று இலங்கை அரசைக் கேட்டுள்ளது.

இலங்கைக்கு வந்துள்ள சுவிற்சர்லாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு மேலும் தெரிவித்துள்ளதாவது - இரண்டு தசாப்த காலமாக நடைபெற்றுவரும் போரின் காரணமாக மனித உரிமைகள் மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் சிதைந்து போயுள்ளன. எனவே, இவற்றில் மாற்றங்களை உடனடியாகச் செய்யவேண்டும்.

இவர்கள் சுவிற்சர்லாந்து அரசாங்கத்தினால் நடத்தப்படும் உதவி வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்களைப் பார்வையிட வந்தபோது, இலங்கையில் நடக்கும் அரசியல் நிகழ்வுகளையும் பார்வையிட்டனர்.

நாம் சந்தித்த அனைவரும் சமாதானத்தையே விரும்பினர். போரினால் தாம் களைப்படைந்து விட்டதாகவும் தெரிவித்தனர் என இந்தக்குழுவிலுள்ள சிசில் புல்மன் தெரிவித்தார்.

2002 ஆம் ஆண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை செய்து, இடையில் பேச்சுவார்த்தைகள் அரசிற்கும் - புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகி நடந்தபோதும், அப்போது அது இடைநிறுத்தப்பட்டு விட்டது. இந்த பேச்சுவார்த்தை மீளவும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலின் பின்னர் மீள ஆரம்பிக்கப்படுமென நாம் நம்புகின்றோம்.

இங்குள்ள மக்களின் வறுமை நிலைமையைப் பார்க்கும்போது, எனக்கு மிகவும் அதிர்ச்சியாக இருக்கின்றது. அதிலும் குறிப்பாகக் கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் எல்லாவிதத்திலும் ஒடுக்கப்பட்டுள்ளமை மிகவும் வேதனைத் தருகின்றது.

இந்த நாடு ஒரு யுத்தநிறுத்தத்தின் கீழ் இருக்கின்றது. ஆனாலும், இங்கு சண்டை நிறுத்தப்பட்டுள்ளதே தவிர, முழுமையான சமாதானம் வந்துவிடவில்லை. அத்துடன் இங்கு சண்டையும் இடம்பெறவில்லை. இந்த நிலையைப் பார்க்கும்போது நாடு இரண்டுக்கும் இடைப்பட்ட ஒரு தன்மையையே தென்படுகின்றது.

சுற்றுப்புறச்சூழல் பாதிக்கப்பட்டதுடன், கட்டடங்கள் உடைக்கப்பட்டும், முற்றாக அழிக்கப்பட்டும் உள்ளதை நாங்கள் பார்த்தோம்.

நாட்டில் மீண்டும் புனர்நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனாலும், சமாதானம் எவ்வளவு காலத்துக்கு நீடித்திருக்கும் என்பது கேள்விக்குறியாகவுள்ளது.

பகைமை உணர்வுகள் இந்த மக்களிடையே மீண்டும் எழுமாக இருந்தால், முதலில் பாதிக்கப்படுவது இந்த மீள்நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடங்களே.

சமாதான நடைமுறைகளை மேலும் முன்னெடுத்துச் செல்லக்கூடிய வகையில் எமது செயற்பாடுகள் அமைந்திருக்கும். மனிதநேய நிலைமைகளை மேலும் ஆரோக்கியமானதாக்குதல் மற்றும் அதற்கான பணிகளில் ஈடுபடுதல், வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் இங்கு மேற்கொள்ள வேண்டிய பணிகளாக உள்ளன.

மனித உரிமைகள் முறையாகச் செயற்படாமல் மீறப்படுகின்ற பகுதிகளில், மனித உரிமைகளைப் பேணும் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் எமது நாடு பங்களிப்புச் செய்ய வேண்டும்.

எவ்வாறாயினும் இத்தகைய உதவிகள் தேவைப்படும் மக்களுக்கு எங்களால் உதவிசெய்யமுடியும்.

காசை மட்டும் கொடுத்துவிட்டு இருப்பதால் அர்த்தமில்லை. பணத்தைக் கொடுப்பதுடன், அத்தகைய இடங்களில் தங்கியிருந்து நேரடியாகப் பணிகளில் ஈடுபடுவதே சிறந்ததாகும்.

எமது நாடு - பல்வேறு மொழி பேசுகின்ற மக்களையும், கலாசாரத்தையும் கொண்டது. அதேபோன்ற நிலைதான் இலங்கையிலும் காணப்படுகின்றது. எமது நாட்டு அரசியல் அமைப்பு இலங்கைக்கும் பொருத்தக்கூடிய ஒன்று. ஆகையால், எமது அரசியல் அமைப்பை ஒரு முன்மாதிரியாகக் கொள்ளமுடியும் என நாம் நோர்வே அனுசரணையாளர்களுக்கு கடந்த 2002 ஆம் ஆண்டு தெரிவித்திருந்தோம்.

சுவிஸ் நாட்டு நாடாளுமன்ற அங்கத்தவரான 'டிக் மார்டின்' - இனங்கள் எவ்வாறு ஒற்றுமையாக இணைந்துவாழலாம் என்பதை, எமது நாட்டிலுள்ளது போன்று இலங்கையிலும் ஏற்படுத்தமுடியும் எனக் கருத்துக் கூறினார்.

இலங்கைக்கும் - சுவிஸ்நாட்டுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உள்ளது. சுவிஸில் 38000 தமிழ் மக்கள் வாழ்கிறார்கள். சென்ற வருடத்தில் 6.4 மில்லியன் டொலர்களை இலங்கையின் கட்டுமானப் பணிகளுக்காக சுவிஸிலுள்ள அபிவிருத்திக்கும் கூட்டுறவுக்குமான அமைப்பு செலவு செய்துள்ளது.

அதேநேரத்தில், பலசுற்றுப் பேச்சுக்கள் இடம்பெறுவதற்கும் இடமளித்துள்ளது. கனடாவில் பேச்சுவார்த்தை 2003 செப்ரெம்பரில் நடைபெறுவதற்கும் மற்றும் கண்ணிவெடி அகற்றுவதற்கும் எமது நாடு உதவிகளைச் செய்துள்ளது என அவர் தெரிவித்தார்.

## நாடக வழக்கு நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

குழந்தை ம.சண்முகலிங்கம் எழுதிய 'நாடகவழக்கு' என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், வரவேற்புரையை நா.சிவசிதம்பரமும், தொடக்கவுரையை த.சிவகுமாரனும், அறிமுக உரையை ஸ்ரீகந்தவேளும், வெளியீட்டுரையை துரை தங்கராசுவும், வாழ்த்துரையை ஆறு திருமுருகனும் நிகழ்த்தவுள்ளனர்.

கட்டுரைகள், ஆய்வுரைகள் பற்றி முறையே சபா. ஜெயராசாவும், சோ.பத்மநாதனும் நிகழ்த்தவுள்ளனர்

(44)

## மரச்சின்னத்தைக் காக்கவே அம்பாறையில் போட்டியிடுகிறேன்!

### ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

மரச் சின்னத்தைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவே தாம் அமபாறை மாவட்டத்தில் போட்டியிடத் தீர்மானித்ததாக, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சம்மாந்துறையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதலாவது பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் -

நாம் அழிந்தாலும் இந்த மரச் சின்னத்தை அழியவிடமாட்டோம். நாம் அம்பாறை மாவட்டத்தில் பலத்த கண்டனங்களுக்கும், எதிர்ப்புகளுக்கும் மத்தியிலும் போட்டியிட வந்திருப்பது மரச்சின்னத்தைக் காப்பாற்றுவதற்கேயாகும்.

வேட்டுக்களையும், வெடிகளையும் தாங்கியாவது, நான் மாய்ந்தாவது இந்த மாவட்டத்தில் மூன்று ஆசனங்களைப் பெற்றே ஆகவேண்டும். வென்றே தீருவோம் எனத் தெரிவித்தார்.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XX - சிவா சின்னப்பொடி

1970 களின் பிற்பகுதியிலும், 1980 களின் முற்பகுதியிலும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்துக்குச் சென்றவர்கள் - அந்த நடுத்தர வயதுப் பெண்மணியை நிச்சயம் ஞாபகம் வைத்திருப்பார்கள்.

'ஏறுமயில் ஏறி விளையாடுமுகம் ஒன்றே ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே'-



# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

என்ற திருப்புகழை அப்போது 40 -45 வயது மதிக்கத்தக்க அந்தப் பெண்மணி கணீரென்ற குரலில் பாடினால், ஒலிபெருக்கி இல்லாமலே வெளிவீதிவரை கேட்கும். ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் மற்றும் சிறப்பு தினங்களிலும்- காலை, மாலை தவறாமல் அந்த ஆலயத்துக்குச் சென்று திருப்புகழ், கந்தசஷ்டி கவசம், கந்தரலங்காரம் என்று முருக பக்திப் பாடல்களைப் பாடும் அவரை, அந்தப் பகுதி மக்கள்- ஈழத்துச் சுந்தராம்பாள் என்றே அழைப்பதுண்டு.

தலையில் தூக்கிச் செருகிய கொண்டையும், நெற்றி நிறைய விபூதியும், அதற்கு மத்தியில் பெரிய குங்குமப் பொட்டுமாகக் காட்சியளிக்கும் அந்தப் பெண்மணியின் கையால், திருநீறு வாங்கி அணிந்து, ஆசிபெற்றுச் சென்ற பல பெண்களை அப்போது நான் பார்த்திருக்கிறேன்.

மீண்டும் கடந்த 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் என்று நினைக்கிறேன் - பாரிஸ் லா சப்பல் மெத்திரோ வாசலில் வயதான கோலத்தில் அந்தப் பெண்மணியை மறுபடியும் பார்த்தபோது, நான் ஆச்சரியப்பட்டுப் போனேன்.

நெற்றியில் விபூதி இல்லை, குங்குமப்பொட்டு இல்லை - காதில், கழுத்தில், கையில் எந்த நகையும் இல்லை. அந்த மெத்திரோ வாசலில் நின்றுகொண்டு, அடிப்படைவாத மதக்குழுவொன்றின் பிரசார துண்டுப்பிரசுரங்களை நம்மவர்களுக்கு விநியோகித்துக்கொண்டிருந்தார்.

'ஊரில் சைவப்பழமாகக் காட்சியளித்த மனுசியா அது?' என்று என்னால் முதலில் நம்ப முடியவில்லை. ஒரு நிமிடம் நின்று- அவரை உற்றுப்பார்த்தேன். நான் தன்னைப் பார்ப்பதைக் கண்ட அந்தப் பெண்மணி என் அருகில் வந்து...

'தம்பி எங்கடை இனம் பாவமூட்டையைச் சுமக்குது. எங்கடையாக்களைச் சாத்தான்கள் பிடிச்சுப்போட்டுது. நாங்கள் எங்கடை ஆக்களுக்கு விடுதலை வாங்கித் தரப்போறம்... இதை படிச்சுப்பாருங்கோ' என்று சொல்லித் தன்னிடமிருந்த துண்டுப்பிரசுரத்தை என்னிடம் தந்தார். அதை வாங்கிய நான் - 'அம்மா நீங்கள் தொண்டமானாறா' என்று கேட்டேன்.

'இல்லை நான் அச்சுவேலி தம்பி' என்றார் அவர்.

'அப்ப. நீங்கள் முந்தி சந்நிதி கோயிலுக்கு வாறனீங்கள் தானே?' என்று நான் கேட்டேன். அதற்கு 'சந்நிதி கோயிலா அது எங்கே இருக்கு' என்று அவர் சட்டென்று திருப்பிக்கேட்டார்.

உண்மையில் அந்த மனுசி தொ! யாமல் தான் கேட்கிறாரா அல்லது திமிராகப் பதில் சொல்கிறாரா என்பதை ஊகிக்கமுடியாத நான் - 'தொண்டமானாறில்...' என்று வாக்கியத்தை முடிப்பதற்குள்... 'ஓ! ஓ! அந்த ஆற்றங்கரையில் இருக்கிற கோயில் என்ன. ஞாபகம் இருக்கு என்றவர். பின்னர் - 'அந்தக் கோயிலிலை இருக்கிற சுவாமிக்கு என்ன பேர்... அதுதான் அந்தக் கையிலை ஈட்டி ஒண்டு வைச்சுக்கொண்டு, இரண்டு பொம்பிளையளோடு இருப்பார்... அது தான் என்று இழுத்தார்.

எனக்கு மத நம்பிக்கையோ, மதச்சார்போ இல்லாவிட்டாலும், இந்தக் கேள்வி - என்னை ஆத்திரப்பட வைத்தது. வயதான மூதாட்டி என்றும் பார்க்காமல் கன்னத்தில் பளாரென்று அடி கொடுக்கவேண்டும் போலிருந்தது. ஆனாலும், பொது இடம் என்பதால், ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு, 'எனக்குத் தெரியாது சாத்தானாக இருக்கலாம்' என்று கூறிவிட்டுச் சென்றுவிட்டேன். பின்னர் நான் அந்த மூதாட்டியைப் பற்றி விசாரித்தபோது, அவர் 1990 ஆம் ஆண்டு பிரான்சுக்கு வந்ததாகவும், அவரது மகனும், மருமகளும் அந்த மதக்குழுவில் இருந்ததால், அவரும் மதம்மாறி, காந்திமதி என்ற தனது பெயரையும் இசபெல் என்று மாற்றிவிட்டதாகவும் அறிந்தேன்.

புலம்பெயர்ந்த நாடுகளிலே முதலில் தனியன்களாகவும், பின்னர் குடும்பங்களாகவும் இருந்த ஈழத்தமிழர்கள் - 1990 ஆம் ஆண்டுகளில் தமிழ் சமூகம் என்ற அடிப்படையில் தங்கள் இருப்பை உறுதிப்படுத்திக்கொள்ள முயன்றனர்.

உதிரிகளாக இருந்த குடும்பங்கள் - பிள்ளைகள் பிறந்து, அவர்கள் பாலர் பாடசாலைகளுக்குச் செல்ல ஆரம்பித்தபோது, பாலர் பாடசாலை வளாகங்கள் தமிழ்க் குடும்பங்களின் சந்திப்பு மையங்களாக மாறி, உறவுகளும், நட்புகளும் வளர்வதற்கு வழிவகுத்தது.

இதைவிட சமூகத்தளம் என்று வந்தபோது, - உணவு, பண்பாடு, கலாசாரம் என்கின்ற அடிப்படைக் கூறுகளை ஒன்றிணைக்கவேண்டிய தேவையும் நமது மக்களுக்கு ஏற்பட்டது.

பாரிஸ் போன்ற பெருநகரங்களை மையப்படுத்தி, தமிழர்களின் பல்பொருள் விற்பனை நிலையங்கள், உணவு விடுதிகள், முடிவெட்டும் நிலையங்கள் எல்லாம் தோன்ற ஆரம்பித்தன. பிரான்ஸைப் பொறுத்தவரை, பாரிஸ் நகரத்தின் 10 ஆவது நிர்வாகப் பிரிவிலுள்ள லா சப்பல் **(La Chapelle)** பகுதி மெல்லத் தமிழ் மயமாக மாறியது.

பாரிஸ் நகரின் பிரதான தொடருந்து நிலையங்களில் ஒன்றான **Gare de nord** இக்குச் சமீபமாக அமைந்திருக்கும் - அதாவது **Gare de nord** இக்குப் பின்புறமாக அமைந்திருக்கும் லா சப்பல் பகுதி தமிழ் மயமாவதற்கு முன்னர் - ஏனோ பெரியளவுக்கு வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கவில்லை.

ஆனால், இந்தப் பகுதி தமிழ் மயமாக மாற ஆரம்பித்த பின்னர், தெற்காசிய மக்களின் வர்த்தக மையமாக உருவெடுத்தது.

ஈழத்தமிழர்கள், இந்தியத் தமிழர்கள் பாண டிச்சேரி, பங்களாதேஷ்காரர்கள், பாகிஸ்தானியர்கள் என்று - தெற்காசிய மக்கள் வந்து குழுமுகின்ற, சந்திப்புக்களை மேற்கொள்கின்ற, தேநீர் அருந்திச் செல்கின்ற ஒரு பகுதியாக இந்த லா சப்பல் களைகட்டத்தொடங்கியது.

அரிசியும், பருப்பும், தேங்காயும், கருவாடும், மரவள்ளிக்கிழங்கும், முருங்கைக்காயும், தூளும் - சீனப் பல்பொருள் அங்காடிகளில் (சீனர்கள் தங்களுக்கென்று ஒரு பகுதியை உருவாக்கியிருந்தார்கள்) கிடைத்தபோதும், அவற்றை நம்மவர்களின் கடைகளில் வாங்குவதையே தெற்காசிய மக்கள் விரும்பினார்கள்.

கென்யா முதலான ஆபிரிக்க நாடுகளிலும, தாய்லாந்து, மலேசியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளிலிருந்தும் நமது கடைக்காரர்கள் பொருட்களை இறக்கிவிட்டு, யாழ்ப்பாண மரக்கறி, யாழ்ப்பாண முருங்கைக்காய், பூநகரி அரிசி என்றெல்லாம் கதைவிட்டதைப் பற்றி மக்கள் ஆராயமுற்படவில்லை.

போர் நடந்துகொண்டிருக்கும் - பொருளாதார தடை நடைமுறையிலிருக்கும் ஒரு பிரதேசத்திலிருந்து எப்படி ஐரோப்பாவுக்குப் பொருட்கள் ஏற்றுமதியாகும் என்றெல்லாம் மக்கள் சிந்திக்கவில்லை. 'தாயகப் பொருட்கள்' என்ற மண்வாசனை உணர்வே அவர்களுக்கு நம்பிக்கையூட்டக்கூடிய ஒன்றாக இருந்தது.

'ஒரு குட்டி யாழ்ப்பாணம்' என்று நம்மவர்களும் 'தமிழர் பகுதி' என்று பிரெஞ்சுக்காரர்களும் சொல்லும் விதத்தில், ஒரு குறுகிய காலத்தில் துரிதமாக லா சப்பல் பகுதி - தமிழ் மயமாகியது.

லா சப்பலை ஊடறுத்துச் செல்லும் பிரதான வீதியான றூ து பிரீபேர்க் சென்ரனி போக்குவரத்து நெரிசல்மிக்க வீதியாக மாறியது. லா சப்பலுக்குச் செல்லக்கூடிய 2 ஆவது, 5 ஆவது, 4 ஆவது இலக்க மெத்திரோக்களும், **RER** எனப்படும் வேகத் தொடருந்தின் **B,D,E** சேவைகளும் (**E** 2000 ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டது) தமிழர்கள் அதிகம் பிரயாணம் செய்யும் சேவைகளாக மாறின. லா சப்பல் மெத்திரோ நிலையம் தமிழர்களின் பிரதான சந்திப்பிடமாக விளங்கியது.

லா சப்பல் பகுதியிலிருந்த பிரெஞ்சு அரேபிய வர்த்தகர்கள் - படிப்படியாக நம்மவர்களுக்கு வழிவிட்டு, ஒதுங்கிக்கொள்ள, பெரிய வர்த்தக நிலையங்களை அந்தப் பகுதியில் அமைந்திருந்த சிலர், நம்மவர்மீது தீராத வெறுப்பில் இருந்தனர்.

லா சப்பல் - மெத்திரோக்குச் சமீபமாக இருந்த ஒரு பிரபலமான கபே பாரில் **(Caffe Bar)** நம்மவர்களுக்குக் கோப்பியோ, தேநீரோ, மதுபானமோ கொடுப்பதில்லை. போலந்து நாட்டைப் பூர்வீகமாகக்கொண்ட பிரெஞ்சுக் குடியுரிமை பெற்ற அந்த கபே பார் உரிமையாளர், நம்மவர்கள் மீது சரியான கடுப்பில் இருந்தார்.

நம்மவர்களுடைய வருகையால், தனது வியாபாரம் விழுந்துவிட்டது என்ற வெறுப்பை விட, இயல்பாகவே அவரிடம் நிற வெறியும், இனவெறியும் இருந்தது. இந்த விடயத்தைப் பற்றிப் பலர் என்னிடம் தெரிவித்தபோதும், நான் முதலில் நம்பவில்லை. பாரிஸ் நகரத்தில் இப்படி நடக்கமுடியாது என்று அவர்களுக்குச் சொன்னேன்.

ஆனால், உண்மையில் அப்படி நடக்கிறது என்று அவர்கள் கூறியதைத் தொடர்ந்து, மாவீரரான கப்டன் கஜனும் (அப்போது அவர் பாரிஸ் ஈழமுரசு நிர்வாக ஆசிரியர். நான் ஆசிரியர்) நானும் அந்த கபே பாருக்கு நேரில் சென்று கோப்பி கேட்டோம்.

அந்த முதலாளி - எங்களை அனுமதிக்காமல் வீட்டுக்குள் நுழையும் பிச்சைக்காரர்களை விரட்டுவதுபோல் விரட்டிவிட்டார். கழுத்தைப் பிடித்து வெளியில் தள்ளாத குறை ஒன்றுதான்.

*(தொடரும்...)*

# ஆயுதங்களைப் போட்டுவிட்டு வீடுகளுக்குச் செல்லுங்கள்

## ஹெயிட்டி போராளிகளிடம் அமெரிக்கா வேண்டுகோள்

ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு தமது இல்லங்களுக்குச் சென்றுவிடுமாறு ஹெயிட்டியில் நிலைகொண்டுள்ள போராளிக் குழுவை அமெரிக்கா கோரியுள்ளது.



ஜனாதிபதி அரிஷ் டைட் தலைநகரிலிருந்து வெளியேறிய பின்னர், ஹெயிட்டியின் போராளிகள் குழு தலைநகரைக் கைப்பற்றியிருந்தனர். குழுவின் தலைவர் கை பிலிப்பி ஹெயிட்டியின் இராணுவப் படையின் தலைவர் என தன்னைப் பிரகடனப்படுத்திக்கொண்டார்.

இதனையடுத்தே, ஹெயிட்டி அரசியலில் போராளிக் குழுவிற்கு எதுவித இடமும் இல்லை எனவும், ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு செல்லுமாறும் அமெரிக்கா கோரியுள்ளது.

ஜனாதிபதியின் வெளியேற்றத்தின் பின்னர், ஹெயிட்டியின் அமைதியைப் பேணுவதில் அமெரிக்கா முன்னின்று செயற்பட்டுவருகின்றது.

இதனிடையே, கடந்த செவ்வாய்க்கிழமை பிரதம மந்திரி 'ஜோவொன் நெயுப்டன்னக்' கைதுசெய்யும் முயற்சியை கை பிலிப்பி மேற்கொண்டிருந்ததாகவும், இம்முயற்சி அமெரிக்கப் படையின் தலையீட்டினால் முறியடிக்கப்பட்டதாகவும் ரொய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுப் படைகளைப் போராளிக் குழுத் தலைவர் வரவேற்றபோதிலும், ஹெயிட்டி மக்களை காப்பாற்றுவது தனது தார்மீகக் கடமை என அவர் குறிப்பிட்டார். மேலும், ஹெயிட்டியின் அரசியலில் பங்கு கொள்ள நான் விரும்பவில்லை. ஆனால், படையின் தலைமைப் பதவியை நான் விரும்புகிறேன் என்று 'பிலிப்பி' தெரிவித்தார்.

உலகின் வறியநாடுகளில் ஹெயிட்டியும் ஒன்றாகும். தற்போதைய நிலை, மக்களை மேலும் மோசமான நிலைக்கு கொண்டுசெல்லலாம் என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஐக்கிய நாடுகளின் சபைச் செயலர் கோபி அனான் உணவு, மருத்துவம் ஆகியவற்றை ஹெயிட்டி மக்களுக்கு வழங்குவதற்கு உலகநாடுகளிடம் உதவியை நாடியுள்ளார்.

மேலும், சமாதானப் படையை ஹெயிட்டிக்கு அனுப்புவதற்கு 15 கரீபியன் நாடுகள் ஜமேக்காவில் ஒன்றுகூடி ஆராய்ந்துவருகின்றன.

# புஷ்சை எதிர்த்துப் போட்டியிட ஜோன் ஹெரி ஆயத்தம்

(வாஷிங்ரன்)

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அமெரிக்க அதிபர் 'ஜோர்ஜ் புஷ்' ஐ எதிர்த்துப் போட்டியிடும் தகுதியை ஜோன் ஹெரி பெற்றுள்ளார்.




இது தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி புஷ் - ஜோன் ஹெரியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டிருந்தார்.

தொலைபேசிச் சம்பாசனையில் உற்சாகமான போட்டியொன்றை எதிர்பார்த்துக் காத்திருப்பதாக அதிபர் புஷ் தெரிவித்திருந்தார். இதனிடையே ஜோன் ஹெரிக்கு எதிராகப் போட்டியிடும் ஜோன் எட்வாட், போட்டியிலிருந்து விலகிக்கொள்ளவுள்ளதாக புதன்கிழமை தெரிவிக்கத் திட்டமிட்டுள்ளார். இதனிடையே, எட்வாட் ஜோன் ஹெரியின் உதவி ஜனாதிபதியாகப் போட்டியிடுவார் என்ற கருத்தை மறுத்திருந்தார்.



மேலும் வாஷிங்டனில் இதுவரை கிடைத்த தனது வெற்றி தொடர்பான உரையில் அதிபர் புஷ்சின் வெளிநாட்டுக்கொள்கையை விமர்சித்திருந்தார். இதனிடையே, வியாழக்கிழமை பல மில்லியன் டொலர் செலவு செய்து தொலைக்காட்சியின் மூலம் தனது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளார்.

# ஈராக் குண்டுவெடிப்பு சம்பவத்தில் பலியானோர் 271 ஆக அதிகரிப்பு

ஈராக் தலைநகர் பாக்தாத் மற்றும் கர்பலா ஆகிய நகரங்களில் 'ஷியா' முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இறந்தவர்களின் எண்ணிக்கை 271 ஆக அதிகரித்துள்ளது.



ஈராக்கில் அமெரிக்கக் கூட்டுப்படை மேற்கொண்ட போரின் பின்னர், கூடுதலான பொதுமக்கள் இத்தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈராக்கின் ஆளும் சபை, மரணமடைந்தவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக மூன்று நாட்களை துக்கதினமாக பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த ஈராக்கிய தலைவர்கள், தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் முஸ்லிம்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளனர். இதேவேளை, அமெரிக்க அரசு இந் தப் படுகொலைக்கும் அல்கொய்டா அமைப்புக்கும் தொடர்பிருப்பதாக தெரிவித்துள்ளது.

ஆனால், ஷியா முஸ்லிம்களின் ஆன்மீகத் தலைவர் ஆயதுல்லா சுல் சிஷ்டான் கருத்துத் தெரிவிக் கையில்,

அமெரிக்க அரசு ஈராக்கின் எல் லைப் பிரதேசங்களை நன்கு கண் காணிக்கவில்லை எனவும், இதனால் வெளிநாட்டுத் தீவிரவாதிகள் இலகு வில் ஊடுருவ முடிந்ததாகவும் தெரி வித்தார்.

சென்ற புதன்கிழமை நடைபெற்ற மற்றுமொரு சம்பவத்தில், பாக்தாத் தில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தின்மீது எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதனிடையே, மேலும் 6 குண்டு வெடிப்புகள் கர்பலாவில் அமைந்துள்ள பள்ளிவாசல்களை தாக்கும் நோக்கில் நடத்தப்பட்டன.

சதாம் ஹுசேனின் ஆட்சிக்காலத்தில் ஷியா முஸ்லிம்களின் மதச் சடங்குகளை 'சனி' முஸ்லிம்களால் தடுக்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மாவோ தீவிரவாதிகள் தாக்கியதில் 29 படையினர் கொல்லப்பட்டனர்!

## நேபாளத் தலைநகரில் சம்பவம்

நேபாளத் தலைநகர் காத்மண்டுவின் கிழக்குப் பிரதேசமான போய்ப்பூரில் அரச படையினர் மற்றும் பொலிஸாரை, தீவிரவாதிகள் தாக்கியதில் 29 படைவீரர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலின்போது 10 மாவோ தீவிரவாதிகளும் கொல்லப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமாதானப் பேச்சுக்கள்மூலம் அரசுக்கும், மாவோ தீவிரவாதிகளுக்கும் இடையில் நிலவிவந்த சுமுகமான உறவு கடந்த ஓகஸ்ட் மாதத்துடன் முறிவடைந்தபின்னர் இடம்பெற்றுள்ள பெரியதொரு தாக்குதல் சம்பவம் இதுவாகும்.

தொலைத் தொடர்பு கோபுரத்தைப் பாதுகாக்கும் கடமையில் ஈடுபட்டிருந்த அரச படையினர் மற்றும் பொலிஸ் காவலர்கள்மீது, நூற்றுக்கும் மேற்பட்ட மாவோ தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டனர். அத்துடன், அரச அதிகாரிகளின் காரியாலயம் மற்றும் வங்கி ஆகியவற்றின்மீதும் மாவோ தீவிரவாதிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

பலமணிநேரம் இரு பகுதியினருக்குமிடையே துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றதாகவும், ஹெலிகொப்டர்கள் அவ்விடத்திற்கு விரைவாக அழைக்கப்பட்ட பின்னர் தீவிரவாதிகள் அப்பிரதேசத்திலிருந்து வெளியேறியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, பாடசாலைகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல்களை, மாவோ



மாணவர் அமைப்பு நிறுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டிருந்தபோதிலும், பொதுமக்களினதும், மாணவர்களினதும் எதிர்ப்பினைத் தொடர்ந்து தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்றது.

தேர்தல் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்துள்ளமை மாவோ தீவிரவாதிகளுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

நேபாளத்தில் பாடசாலைகளில் நடைபெறும் தேர்தல்கள் நாட்டில் நடைபெறும் தேர்தலில் முக்கிய இடத்தை வகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும்வரை மாவோ தீவிரவாதிகளால் ஏறக்குறைய 9000 பொதுமக்கள் கொல்லப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீர் தற்கொலைத் தாக்குதலில் 6 பேர் பலி; பன்னிரண்டு பேர் படுகாயம்!

(காஷ்மீர்)

இந்திய காஷ்மீர் பகுதியில், பிரிவினைவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குத



லில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 12 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். இந்தத் தகவலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காஷ்மீரின் தலைநகர் ஜம்முவில் அமைந்துள்ள நீதிமன்றமொன்றிற்கு, சிறைக் கைதிகளை அழைத்துச் செல்வதற்குத் தயாராக நிறுத்தப்பட்ட வாகன மொன்றின்மீதே பிரிவினைவாதிகள் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை, காஷ்மீரின் தலைவர் 'மப்ரி மொகமட் சயீட்' சென்ற வாரம் இடம்பெற்ற கிரனைட் தாக்குதல் ஒன்றிலிருந்து தப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சிறைச்சாலையில் நடைபெற்ற தாக்குதல் தொடர்பாக பொலிஸ் அதிகாரி 'குப்தா' தெரிவிக்கையில்,

சிறைச்சாலையில் இருந்து நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லவிருந்த கைதி ஒருவரை மீட்டுச் செல்வதற்காக கிரனைட் குண்டொன்றை உடலில் கட்டியவாறு வந்த நபரொருவரே இந்தக் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டதாகவும், இந்தத் தாக்குதலில் மூன்று பொலிஸாரும் கைதி ஒருவரும் உட்பட 6 பேர் கொல்லப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

தாக்குதல் சம்பவத்தின் பின் அந்தப் பிரதேசம் பொதுமக்களின் பாவனைக்கு தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனிடேயே, மிதவாத காஷ்மீர் பிரிவினைவாதிகள் பாதுகாப்பு நிலமைகளில் மாற்றம் ஏற்படாதுவிட்டால், பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேறப்போவதாக சென்ற வாரம் அறிவித்திருந்தனர்.

இதேவேளை, மனித உரிமைகள் தொடர்பாக இந்தியப் படையினர் தெரிவித்த கருத்துகளின் பின் காஷ்மீர் பாதுகாப்பு நிலைமைகள் பற்றி ஆராய்வதற்கு உயர்மட்டக் குழுவொன்று உருவாக்கப்பட்டிருந்தது.

அண்மையில் இந்தியாவும், பாகிஸ்தானும் சர்ச்சைக்குரிய காஷ்மீரின் எல்லை தொடர்பாக சமாதான பேச்சுவார்த்தைக்கான பாதை வரைபினை உருவாக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உலக நோக்கு

# பிரான்ஸின் ரயில் பாதைகளை குண்டு வைத்து தகர்க்க திட்டம்!



பிரான்சில் அமைந்துள்ள ரயில் பாதைகளைக் குண்டு வைத்துத் தகர்க்கப்போவதாக குழு ஒன்றினால் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பல மில்லியன் டொலர்களைக் கப்பமாக கேட்டுள்ள அந்தக் குழு, ஏற்கனவே 10 இற்கு மேற்பட்ட குண்டுகளை ரயில் பாதைகளில் பொருத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

பிரான்ஸ் அதிகாரிகளுக்கு எச்சரிக்கைக் கடிதங்களை இந்தக் குழு அனுப்பிவைத்துள்ளது. ஒரு கடிதத்தில் பிரான்ஸின் மத்திய பகுதியில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டிருந்த தகவலையடுத்து, அந்த இடத்தில் தேடுதல் நடத்தியபோது குண்டு ஒன்றை அகற்றியதாக ஏ.எப்.பி. செய்தி ஸ்தாபனத்திற்கு பிரான்ஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

முதலில் கடிதங்கள் ஜனாதிபதி செயலகத்திற்கும் மற்றும் உள்நாட்டு அமைச்சு ஆகியவற்றிற்கும் அனுப்பியிருந்ததாக பிரெஞ்சு செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது. ஜனவரி, பெப்ரவரி ஆகிய மாதங்களில் மேலும் இரு கடிதங்கள் கிடைத்திருக்கின்றன.

பயங்கரவாதத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில் அனுபவம் மிக்க நீதிபதி ஜூன் லுசிஷ் இது தொடர்பாக ஆராய்நதுவருகின்றார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# நிரந்தர தீர்வு ஏற்பட்ட பின்னரே மீள்குடியமர்வு சாத்தியமாகும்!

## டக்ளஸ் தேவானந்தா கூறுகிறார்!

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட்ட பின்னரே அதியுயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக் குடியமர்வு தொடர்பான பிரச்சினைக்கு பூரண தீர்வுகாணப்பட வேண்டும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி கட்சியின் செயலாளர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். இது தொடர்பாக நேற்று அந்தக் கட்சியின் தகவல் தொடர்புச் செயலாளர் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் நடைமுறைகளைப் பின்பற்றப் புலிகள் முன்வந்திருப்பது குறித்து நாங்கள் மகிழ்ச்சி அடைகின்றோம். எனினும், அவர்கள் நாடாளுமன்ற ஜனநாயக அரசியல் நடைமுறைகளுக்கு அத்திவாரமாகவுள்ள தேர்தல்களை எதற்காக பயன்படுத்தப் போகின்றனர் என்பது குறித்த சந்தேகங்கள் எமக்கு உண்டு.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படாமை யுத்தத்தை தோற்றுவித்தது. யுத்தம் இடம்பெற்றமையின் காரணமாகவே அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் தோற்றம் பெற்றன. எனவே இனப்பிரச்சினைக்கு விரைவான தீர்வைக் கண்டு அமுல்படுத்துவதன் ஊடாகவே அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் நீக்கப்படும் சூழல் உருவாகும்.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக படையினர் பிரகடனம் செய்துள்ள பகுதிகளிலும் அப் பிரதேசத்திற்குரிய மக்கள் மீளக்குடியேற வழி காணப்படவேண்டும் என்பதில் எமக்கு எதுவித கருத்து வேறுபாடுகளும் இல்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் போதே அது உயர்பாதுகாப்பு வலயத்தில் மீள் குடியமர்வு பிரச்சினைக்கு பூரணமான தீர்வு காண முடியும். அதனிடையில் சாத்தியமான இடங்களில் இயலுமான விரைவில் மீளக் குடியமர்வுகள் இடம்பெற நடவடிக்கை எடுத்து வருகின்றோம் எனவும் இந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

# நிர்வாகசேவை அலுவலருக்கு சம்பள உயர்வுகள் இல்லை!

நாடாளுமன்றக் கலைப்பால் நிர்வாகசேவை உத்தியோகத்தர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்க முடியாதிருபபதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 18 ஆம் திகதி இந்தச் சம்பள அதிகரிப்புத் தொடர்பான விபரம் கிடைக்கப் பெற்றமையால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச ஊழியரிடையே நிலவும் சம்பள முரண்பாட்டினை நீக்கும்முகமாக 210 மில்லியன் ரூபாவை ஒதுக்கும் திட்டமொன்று நடைமுறைக்கு கொண்டுவரப்பட்ட சமயமே நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது.

இதற்கான நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைத்த போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான எந்தவொரு சூழ்நிலையும் தற்போது இல்லாதிருப்பதால் அப்பணிகள் முடக்கமடையும் நிலை தோன்றியிருப்பதாகவும் நிதி அமைச்சு தெரிவித்துள்ளது. (01)

# வாக்களிப்பு நிலையங்களில் குழப்பம் ஏற்படுத்த முனைவோர் அந்த இடத்திலேயே சுடப்படுவர்!

## வடமேல் மாகாண பிரதிப்பொலிஸ் மா அதிபர்

எதிர்வரும் பொதுத்தேர்தலிலும், வடமேல் மாகாண சபைத் தேர்தலிலும், வாக்களிப்பு நிலையங்களில் குழப்பங்களை ஏற்படுத்த முனைவோர் அந்த இடத்திலேயே சுடப்படுவர் எனவும், இதற்கான உத்தரவை தான் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளதாகவும் வடமேல் மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அசோக ரத்னவீர தெரிவித்தார்.

வடமேல் மாகாணத்தில் தேர்தல் சட்டதிட்டங்கள் கடுமையாக, நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து சவால்களுக்கும் முகங்கொடுத்து தாம் தேர்தலை நடத்த உள்ளதாகவும் நேற்று குருநாகல் பிரதான காவல் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்தார்.

வடமேல் மாகாணத்தின் இரு தேர்தல்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக வவுனியாவில் இருந்து விசேட பயிற்சி பெற்ற பொலிஸ் குழுக்கள் வரவழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் விசேட பயிற்சி பெற்ற தலா இரு பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவர் எனவும் நான்கு வாக்களிப்பு நிலையங்களுக்கு ஒரு பொலிஸ் ரோந்துச் சேவை நடைபெறும் எனவும் அவர் கூறினார்.

வடமேல் மாகாணத்தில் குருநாகல், புத்தளம் மாவட்டங்களில் இதுவரை 31 தேர்தல் வன்முறைகள் தொடர்பாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், விசேட வீதித்தடைகள் ஏற்படுத்தப்பட்டு பொலிஸார் 24 மணி நேரமும் உசாராக இருப்பர் எனவும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் வடமேல் மாகாணத்தின் உயர் பொலிஸ் அலுவலர்கள், அனைவரும் கலந்துகொண்டனர். (01)

## வவுனியா மாவட்டத்தில்

# சர்வோதயத்துடன் இணைந்து பவ்ரல் அமைப்பு செயற்படும்!

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலைக் கண்காணிக்க வவுனியா மாவட்டத்தில் ‘பவ்ரல்’ அமைப்பு முன்வந்துள்ளது.

வவுனியா சர்வோதய அமைப்புடன் இணைந்து செயற்படவுள்ள பவ்ரல் அமைப்பின் இணைப்பாளராக எஸ்.கனகரட்ணம் செயற்படவுள்ளார்.

தேர்தலன்று வவுனியா மாவட்டத்தில் 188 உறுப்பினர்கள் இவ் அமைப்பின் சார்பில் போட்டியிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வமைப்பின் பணிகள் கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை தேர்தல் வன்முறைகள் தொடர்பாக எந்தவொரு முறைப்பாடுகளும் தமக்கு கிடைக்கவில்லை என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

### நடத்தமுடியாத பகுதிகளில்...

உள்ளூராட்சி தேர்தல்கள் பல வருடங்களாக ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பிரதேசங்களில் தேர்தல்களை நடத்துவதற்கு தேவையான ஜனநாயகமும், சுதந்திரமும் இல்லை.

இந்நிலையில் வடக்கு - கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான நிலைமை குறித்து அவசரமாக மாற்றம் ஏற்பட்டுள்ளதை ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கான நிபந்தனைகளையும் வழங்காது, ஆயுதம் தாங்கிய குழுவினரின் அதிகாரத்தின் கீழான பகுதிகளில் பொதுத் தேர்தலை நடத்தவேண்டாமென ஜே.வி.பி. தேர்தல் ஆணையாளரிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

# சுதந்திரமான தேர்தலை நடத்த தேர்தல் வன்முறைகள் தடை!

## பவ்ரல் அமைப்பு கண்டனம்

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு தடையாக இருக்கும் அரசியல் கொலைகள் மற்றும் தேர்தல் வன்முறைகளை பவ்ரல் எனப்படும் சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

மட்டக்களப்பு ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரின் கொலையினையும், அதன் பின்னர் நடைபெற்ற ஈ.பி.டி.பி இயக்க உறுப்பினரின் கொலையையும் வன்மையாகக் கண்டிப்பதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் வன்முறைகள் இடம்பெறுவது வடக்கு கிழக்குக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டது ஒன்றல்ல என்று சுட்டிக்காட்டும் அந்த அமைப்பு, நாட்டின் மத்திய பிரதேசங்களில் இடம்பெறும் தேர்தல் வன்முறைகளும் உடன் நிறுத்தப்படவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல் ஒன்றை நடத்துவதற்காக சூழ்நிலை ஏற்படுத்த உதவுமாறு அரசாங்கத்திடமும், விடுதலைப் புலிகளிடமும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (01)

### மேலும் இரு...

ணமாக விலகுவதாக தெரிவித்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலருக்கு கடிதமனுப்பியுள்ளனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் மட்டக்களபபு மாவட்ட வேட்பாளா சின்னத்தம்பி சுந்தரம்பிள்ளை என்பவர் கடந்த 29 ஆம் திகதி சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனையடுத்து அந்த மாவட்டத்தில் போட்டியிட்ட இரண்டு ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்கள் விலகி இருந்தனர். நேற்று மேலும் இருவர் விலகுவதாக அறிவித்துள்ளனர்.

இந்த நிலையில் அருளப்பு அந்தோனிமுத்து, ரூபசிங்க குமாரதாஸ, சாள்ஸ் பாத்லேட் மற்றும் கவிஞர் முத்துக்குமாரு ஆகியோர் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவுள்ளனர். (01)

### வேட்பாளர்...

ஜனநாயக ரீதியற்ற இவ்வாறான அரசியற் படுகொலைகளை ஜப்பான் அரசு கண்டிக்கிறது என அவர் தெரிவித்தார்.

### தேர்தல்...

புலிகளின் இந்த யோசனை தொடர்பாக வெளிநாட்டு அதிகாரிகள் மூலமாக அரசாங்கத்திற்குத் தெரியப் படுத்தப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இது தொடர்பாக அரசாங்கத் தரப்பின் பதில் குறித்து இதுவரை எந்தவித முடிவும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

### நெருப்புக் காய்ச்சல்...

பதாக அமையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது சுகாதாரமுறையை மக்கள் பின்பற்றாவிடில் பாரிய ஆபத்துக்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மலேரியாவின் தாக்கத்திற்கு இலக்கான நிலையில் பலர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

### இனப்பிரச்சினைக்கு...

கனகரத்தினம் ஆகியோர் சந்தித்தனர். காலை 9.45 மணிக்கு யாழ். ஆயர் இல்லத்துக்குச் சென்று ஆயரை சந்தித்து கூட்டமைப்பின் செயற்பாடு தொடர்பாக எடுத்துக் கூறி ஆயரின் ஆசிர்வாதத்தையும் பெற்றனர்.

தொடர்ந்து அங்கிருந்து புறப்பட்டு நல்லை ஆதின குருமாக சன்னிதான குரு முதல்வரை சந்தித்தனர் அவரிடம் கூட்டமைப்பின் செயற்பாடுகள் தொடர்பாக எடுத்துக் கூறி அவரின் ஆசியை பெற்றனர்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை முடிவுக்கு கொண்டுவர தமிழ் தேசிய கூட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கவேண்டும்.

இலங்கைத் தீவில் நிரந்தரமான சமாதானம் ஒன்று ஏற்பட்டு மக்கள் அனைவரும் சுதந்திரமாக வாழ கூட்டமைப்பு வேட்பாளர்கள் உழைக்க வேண்டும் என நல்லை ஆதீன முதல்வர் வேண்டுகோள் விடுத்தார்.

தொடர்ந்து பிற்பகல் வேளை தென்னிந்திய திருச்சபை பேராயரைச் சந்தித்து அவரிடம் தமது செயற்பாடுகள் பற்றி விளக்கிய கூட்டமைப்பு வேட்பாளர்கள் அவரின் ஆசியையும் பெற்றனர். (தீ)

### அரியாலை...

வித்ததாவது -

கண்ணிவெடியகற்றும் பிரிவான ஹலோ ட்ரஸ்ற், அரியாலைப் பகுதியில் தற்போது கண்ணிவெடிகளை அகற்றி வருகிறது. நேற்று கண்ணிவெடிகளை அகற்றியபோது அப்பகுதியில் கைவிடப்பட்ட காவலரணுக்குள் இருந்து இந்த எலும்புக்கூடு மீட்கப்பட்டது.

எலும்புக்கூடு கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பாக கோப்பாய் பொலிஸிற்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து, அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.03.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.